உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இலங்கைவளமும் தாலவிலாசமும்

Dr. U.V.S. IYER LIBRARY MADRAS-90
24437

யாழ்ப்பாணத்து,
நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர்
செய்தது

வண்ணார்பண்ணை
ஸ்ரீ சண்முகநாத அச்சகம்.
விரோதி ஆண்டு ஆவணித் திங்கள்.

Dr. U. V. S. IYER LIBRARY
24437
MADRAS-90

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# இலங்கைவளமும்
# தாலவிலாசமும்

யாழ்ப்பாணத்து,
நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர்
செய்தது.

வண்ணார்பண்ணை
ஸ்ரீ சண்முகநாத அச்சகம்
விரோதி ஆண்டு ஆவணித் திங்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இலங்கைவளமும் தாலவிலாசமும்

யாழ்ப்பாணத்து,
நவாலியூர், க. சோமசுந்தரப்புலவர்
செய்தது.

வண்ணார்பண்ணை
ஸ்ரீ சண்முகநாத அச்சகம்
விரோதி ஆண்டு ஆவணித் திங்கள்.

PRINTED
AT THE SRI SANMUGANATHA PRESS,
VANNARPONNAI

**and published**
BY
**C. J. Iliathamby, B. A.,**
*St. John's College, Jaffna*

AND
**Pundit S. Ilamuruganar**
*for the*
KEELAI – NADDU KALVIPADDATHARIKAL
(PUNDIT AND VIDWAN GRADUATES) ASSOCIATION, JAFFNA.

[*Copyright Reserved.*]

# பதிப்புரை

செந்தமிழ்த்தொண்டு செய்தலையே குறிக்கோளாகக் கொண்டு, சென்ற ஐம்பது ஆண்டுகளாக அமுதனைய பாடல்களை அள்ளிச் சொரிந்து வரும் செந்தமிழ்ப் பாவலராகிய நவாலியூர் க. சோமசுந்தரப் புலவரவர்களை எல்லாரும் அறிவர். தென்னிந்தியப் புலவர்கள், அப்பாடல்களின் சிறப்புக்களைப் பலமுகத்தாற் பாராட்டி வருகின்றனர். 'செந்தமிழ்ச் செல்வி'—'கலாநிலையம்' முதலிய செந்தமிழ் ஏடுகளில் முன்னர் வெளிவந்த புலவர் பாடல்களை யெல்லாம் நூல் வடிவில் வெளிப்படுத்தியும் வருகின்றனர்.

இலங்கையிலுள்ள புலவர்தம் மாணாக்கரும் நண்பரும் அருங்கலை விநோதரும், "புலவருடைய நூல்கள் எல்லாம் விரைவில் அச்சிடப்படுதல் வேண்டும்," என்று பல்லாண்டாக விரும்புவாராயினர். அவர்தம் விருப்பத்தை யொல்லும்வகை நிறைவேற்றக் கருதி, 'இலங்கை வளமுந் தாலவிலாசமும்' என்னும் இருநூலையும் முதலில் வெளியிடுகின்றேம். இதன்பின்பு வெளியிடற்பாலன இவை:

1. நாமகள் பிரபந்தத் திரட்டு
2. முருகன் பிரபந்தத் திரட்டு
3. விநாயகர் பிரபந்தத் திரட்டு
4. சிறுவர் இலக்கியம்
5. தனிப்பாடல்கள்
6. தமிழாசாரம்
7. நவாலியூர் வன்னிய சேகரன் பள்ளு
8. குருநாதன் புராணம்
9. சித்தாந்த விளக்கம்
10. சாவித்திரிகதை (திருந்திய பதிப்பு)

இவை யெல்லாம் ஒன்றுசேரப் பத்தாயிரம் பாடல்களுக்கு மேலாகும்; இதுகாறும் வெளிவந்த நூல்களிலுள்ள பாடல்களின் தொகையும் ஒரு குத்து மதிப்பாக ஐயாயிரம் ஆதல் கூடும்.

எல்லாமாகப் பதினையாயிரம் பாடல்களை யெழுதிய ஒரு செந்தமிழ்ப் புலவனைச் சிறப்பித்தற்குத் தமிழரசு இல்லாமை வருந்தத் தக்கது. மூவேந்தர் தனியரசு புரிந்தஞான்று பிறக்கும் பேறு எங்கள் புலவருக்கிருப்பின், எத்தனையோ காவியங்கள் வெளிவந்திருக்குமன்றே! சொல்வளமும் பொருள்வளமுமின்றி, வறிய சொற்கோப்புக்களாற் கட்டியெழுப்பும் வெறும்பாட்டுக்களுக்கே இந்நாளில் மதிப்புண்டு. 'புரட்சிக்கவி' என்னும் ஓரரக்கன் புதுமையாகப் புகுந்து, தமிழிலக்கண வரம்பினையும் செந்தமிழ் மரபு நெறியையும் மெய்ப் புலமையையும் அழித்து வருதலை யாம் எல்லேமும் உணர்கின்றேம். தமிழ்ப் புலமைக் குறைவே இதற்குக் காரணமென்பது புனைவன்று. புது நாகரிக வாழ்வும் ஆங்கிலக் கல்வியும் தமிழ்ப் புலமையை அழித்து விட்டன. அது நிற்க. புலவருடைய எல்லா நூல்களையும் தனித்தும் சேர்த்தும் வெளியிடுதற்கு மூவாயிரம் ரூபா வேண்டும் என்ப. தமிழன்பர்களும் புலவருடைய மாணக்கரும் இத்தொண்டிற் புகுந்து உதவி செய்வார்களென்று பெரிதும் நம்புகின்றேம். சென்ற முப்பது ஆண்டாகப் புலவருடைய அருமைத் தம்பியும் மாணக்கருமாகிய, சைவத்திருவாளர் க. **வேலுப்பிள்ளையவர்கள்,** புலவருடைய பாடல்கள் அனைத்தையும் பொன்போற்பேணி நூல்களாக வெளியிட்டும், "கலாநிலையம்"—"செந்தமிழ்ச் செல்வி" முதலிய தமிழேடுகளில் வெளியிட்டும் வந்தார்கள். கம்பருக்குச் சடையப்ப வள்ளல் வாய்த்தமை போலவே, புலவருக்கு அவர் துணைவர் வாய்த்தார்.

காலந்தோறும் புலவருக்கு வேண்டிய இடம் பொருள் ஏவல் முதலிய எல்லாவசதிகளையும் மனமுவந்து செய்து அவற்றுற்குக் கைம்மாருக அமுதனைய பாடல்களையே பெற்றுக் கொள்ளுவார்.

இத்துணையாயிரம் இனிய பாடல்களும் எழுதற்குக் காரணம், புலவர்தந் துணைவரின் இடையருவூக்கப்பாடே யாமென்பது மிகையாகாது. அவருக்குத் தமிழார்வ முடையார் நன்றி யுரியதாக! அவர் திருப்பெயர் பல்லாண்டு நிலவுக!!

புலவர் அவர்களிலே நன்மதிப்புக் கொண்டோருள் முதன்மையானவர், திருநெல்வேலிச் சைவாசிரிய கல்லூரி விரிவுரையாளரும் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய திருவாளர் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் ஆவர். பண்டிதர் அவர்கள் இன்றைய இலக்கியவுலகத்திலே திகழும் ஒரு குன்ருத் திருமணி விளக்கம். அவர்கள், தமது நுண்மாணுழைபுலத்தால், இலக்கியச்சுரங்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் பொருணலச் செழுமணிகளை யெல்லாம் ஆய்ந்தெடுத்துக்காட்டி எல்லாரையும் இன்புறுத்தி வருகின்ருர்கள். அவர்கள் இலங்கைவளத்திற்கு ஓர் அணிந்துரை யெழுதி யுதவினூர்கள். அவர்களுக்கு எங்கள் நன்றியும் அன்பும் என்றும் உரியன.

இந்நூல்களைச் செம்மையாகவும் அழகாகவும் அச்சிற் பதித்துதவிய திருச்சண்முகநாதன் புத்தகசாலை அதிபர், திருவாளர் ச. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களுக்கும், நூல் வெளிவருதலில் ஊக்கங்காட்டி வந்த அருமை நண்பர் சு. இராசநாயகம் அவர்களுக்கும், தினகரன் ஆசிரியர்,

பண்டிதர் வே. க. ப. நாதன் அவர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றி யுரியதாகுக.

இன்னும், புலவருடைய நூல்கள் எல்லாம் உடனே வெளிவருதற்கும், தமிழ்நாடு முழுமையும் அவர் அருமை பெருமைகளை யறிதற்கும், மறைமுகத்திற் றுணைபுரிந்து ஒருள்ளக் கிளர்ச்சியைத் தமிழ்நாட்டில் எழுப்பிய மும்மூர்த்திகளுக்கும் எங்கள் வணக்கமுரியதாமன்!

நவாலியூர்
1-8-50

சே. இளையதம்பி
சோ. இளமுருகனர்.

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90



க. சோமசுந்தரப்புலவர்

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலிச்
சைவாசிரிய கலாசாலைத்
தமிழ்ப்பண்டிதரும் விரிவுரையாளரும் ஆகிய
**பண்டிதர், சி. கணபதிப்பிள்ளை அவர்கள் நல்கிய**

# அணிந்துரை.

---

மாகாரின் மின்கொடி மடக்கினர் அடக்கி
மீகாரம் எங்கணும் நறுந்துகள் விளக்கி
ஆகாய கங்கையினை அங்கையினின் அள்ளிப்
பாகாய செஞ்சொலவர் வீசுபடு காரம்.

கம்பராமாயணம். சுந்தர காண்டம். ஊர்தேடு படலம். மூன்றும் செய்யுள்.

காரம் - கிருகம்; மீகாரம், மீக்கிருகம் - மேல்வீடு; பாகு ஆய செஞ்சொலவர் - சருக்கரை விளைகின்ற இனிய வசனங்களை வசனிக்கின்ற மகளிர்கள்; மாகாரின் மின்கொடி மடக்கினர் அடக்கி - கரிய மேகங்களிற் படர்ந்த மின்கொடிகளை வலித்து மடக்கிக் கட்டி; (அவைகளினாலே) மீகாரம் எங்கணும் நறுந்துகள் விளக்கி - உப்பரிகைகளிற் பரவி இருக்கின்ற மகரந்தம் முதலிய வாசனைத் துகள்களைப் போக்கி விளக்கஞ்செய்து பெருக்கி; ஆகாய கங்கையினை அங்கையினின் அள்ளி - பக்கத்தே ஓடுகின்ற அருவிகளை அகங்கைகளில் முகந்து; வீசுபடுகாரம்: நீர் தெளிக்கின்ற மாளிகைகள்; இலங்கை மாநகரில் மலிந்துள்ளன; என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் ஆஞ்சநேயரின் கண்கொண்டு வருணிக்கின்றார்.

அப்புத்தளை வீதிகளில் உலாவி, நாவலப்பிட்டி வழியாகக், குயின்ஸ்பெரித் தோட்டத்துக்குப் போய்ப், பிறகு கண்டிக்கு வந்து, சில தினந்தங்கி, மலைவளங் கண்டு

களிக்கின்றவர்கள்—ஐயாயிரம் அடிகளுக்கு மேலே, மலை உச்சிகளில் உள்ள மாளிகைகளிலே, பட்டப்பகலிலே, முகில்கள் கடை திறப்புப்பாடக், கண்ணாடிக் கதவுகளை அடைத்து, மின்சார தீபங்களை ஏற்றிச், 'சாளரந்தோறும் தோன்றும் சந்திரஉதயங்கள்' முகிற் படலங்களின் ஊடே ஊடே தோன்றி மறைவதைக் — கண்கொட்டாது கண்டவர்கள் — கண் நிறையக் கண்டவர்கள் — நமது மலைநாட்டு மாளிகைகளைக் கம்பர் வருணித்தது போதாதென்று குறை சொல்லுவதற்கு முன்வரலாம்.

சீதை இலங்கையிலே பிறந்தவள்; இங்கே சிறை வந்தவள்; ஆஞ்சநேயர் அவளைத் தேடி வந்தவர்; ஸ்ரீராமன் அணைபோட்டு வந்தவன். இவர்கள் இலங்கைக்கு வரும்போது, இவர்கள் சார்பிற், கம்பரும் இலங்கையை இடையிடையே நோக்கியதுண்டு. கம்பருக்கு இலங்கைக்கு வருதற்கும், வந்து மலைநாட்டு மாளிகைகளைத் தரிசிப்பதற்கும் நல்ல சந்தர்ப்பம் கொடுத்து வைக்கவில்லை. இந்த நிலையிற் கம்பரைக் குறைசொல்லாமல், இவ்வளவு சொன்னதற்கு நிறைசொல்ல வேண்டும்.

நமதுநாட்டுக் கவிஞர்பிரான் சின்னத்தம்பிப்புலவர் மலைநாட்டு வளங்களை—மேகமண்டலத்தை அளாவுகின்ற மாடமாளிகைகளை—நேரிற்கண்டு களித்தவர். நாம் அவரிடம் போனால்,

மஞ்சளாவிய மாடங்கள் தோறும்
மயில்கள் போல்மட வார்கணஞ் சூழும்
அஞ்ச ரோருகப் பள்ளியின் மீமிசை
அன்ன வன்னக் குழாம்விளை யாடும்
துஞ்சு மேதி சுரூக்களைச் சீறச்
சுரூக்க ளோடிப் பலாக்கனி கீறி
இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும்
ஈழ மண்டல நாடெங்கள் நாடே

என்று, தமது பரூளாய் விநாயகர் பள்ளில் எடுத்துப் படித்து நமக்குத் திருப்தி அளிப்பார்.

நாங்கள் மலைகளில் மெல்ல மெல்ல ஏறிச், சின்னத் தம்பிப் புலவருடைய மஞ்சளூரவிய மாடங்களிலே, மாகாரின் மின்கொடிகளை மடக்கி அடக்கிய மீக்கிருகங்களிலே பாகாய செஞ்சொலவர்களாகிய மயில்களேபோல் மடவார்களுக்கு மத்தியிலே வீற்றிருந்து கொண்டு, நாற்புறமும் நோக்கி இலங்கை வளம் கண்டு, எட்டியமட்டில் ஒரு சிறிது நுகருவோம்; அநுபவிப்போம்.

அதோ மகாவலிகங்கை பிரவாகிக்கின்றது. பேராதனைத் தோட்டத்தை நோக்குங்கள். அதன் அருகிலே மகாவலி கங்கைக் கரையிலே, தன்னந்தனியே ஒருவர் நிற்கின்றார். இல்லை, அந்தப் பிரவாகத்தோடு பிரவாகமாய் ஒன்று கலக்கின்றார். அவர் யாரோ!

தங்கமயமான தோற்றம்; களங்கமில்லாத மனம்; அகத்தின் அழகு முகத்திற் பிரகாசிக்கின்றது: தங்கத் தகட்டில் வெள்ளிக் கம்பிகளைப் பதித்தாற் போல, அவருடைய தாடி மெல்லிய காற்றுக்கு அசைந்து சோபிக்கின்றது. செந்தாமரை மலர் வெள்ளை அன்னத்தைத் தேடி அடைவது போல, அவருடைய சிவந்தகை — தளிர்போன்ற விரல்கள் — இடையிடையே தாடியைத் தேடி உளர்ந்து கொடுக்கின்றன. அவர் காவி தரிக்கவில்லை. தூய வெண்டுகில் போர்த்தி இருக்கின்றார். கையில் தண்டு கமண்டலம் இல்லை; காகிதம் எழுதுகோல் அழகு செய்கின்றன. அவர் ஆரோ!

சற்றே அணுகுவோம். ஓகோ! அறிமுகமானவர்கள்; நமது நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரவர்கள்.

புலவர் அவர்கள் காட்டுவதைக் காண்போம். சொல்லுவதைக் கேட்போம்: கங்கை பிரவாகிக்கின்றது; கவியும் பிரவாகிக்கின்றது.

சீரான எந்நாடு மெப்பதியு மூரும்
சேர்வான தாவரமும் மாமரமுங் காவும்
பேரான கனிமரமும் பெருமரமுந் தாவில்
பெட்பாரும் பெண்ணைகளும் வாழையொடு மேவி
நேராக ஓரிடத்து நிலையர்க்க் காண
நிலமடந்தை வைத்ததென நின்றுபய னுதவும்
பேராத னைப்புதிய நந்தவன மகவைப்
பேணியமு தூட்டிமகா வலிகங்கை பெருகும்.

புலவரவர்கள் மாணிக்க கங்கையை நோக்கிச் செல்லுகின்றூர்கள். நாங்களும் அவர்களைத் தொடருவோம்.

அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
அன்பொடு சிவாயஎன அருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணுத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணுக் கண்ணென்ன கண்ணே.

இப்பொழுது வாய்க்குள்ளே 'பெரியவனை மாயவனை' என்ற சிலப்பதிகாரப்பாட்டு வரலாம். அது மாமன் பாட்டு: இது மருகன் பாட்டு. அதற்கு இது; இதற்கு அது. இதரவிதரம்.

உண்ட செந்தமிழ்ச் சைவ நூலமு
தோங்க நல்லைவந் தருளு நாவலன்
கண்ட னப்பிர சங்க மாமெனக்
கதிரை மாமலை அருவி காலுமே

இனி, அப்புத்தளைப் பாதையாலே போய்க் கண்டி நகரைத் தரிசிப்போம்.

மலைவளத்தைக் காண்பதற்கு மனங்கொண்ட விலங்கை
மாதேவிக் காகமல ரயனிதனை வகுத்தான்
நிலைவளரு மிந்நகரை யெடுத்துரைக்க வென்றால்
நெடுமுடியர் யிரமுடைய பட்வரவு வேண்டும்.

அதோ கொழும்புமாநகர் தோன்றுகின்றது.

கலைப்பட்டினம் கரைப்பட்டினம்
கலப்பட்டினம் பெருமை
தலைப்பட்டினம் வரைப்பட்டிடாத்
தலைப்பட்டினம் கொழும்பு.

இனி,

யாழ்ப்பாணம் புறப்படுவோம்; பஸ்வண்டியிற் புறப் படுவோம்; காடுகளிற் பல காட்சிகளைக் கண்டு களிக்க லாம்.

சரிந்த வேங்கை முரிந்த கோங்கு
தகர்ந்த சாந்து விழுந்த வேய்
இரிந்த மிருகம் எழுந்த பறவை
இழிந்த அருவி கழிந்தவே.

மங்கலந் திகழ் மாப்பிள்ளை மார்வர
மாமன் பக்கம் வரவெதிர் கொள்ளல்போற்
பொங்கும் வெள்ளப் புதுமண நீர்வரப்
புரளு மீனிரை போயெதிர் கொள்ளுமே.

இவைகள் கலிங்கத்துப் பரணிகள் அல்ல. கலிங்கக் கூழட்ட சயங்கொண்டான் வேறு; "கூடிப்பனங்கட்டிக் கூழ்குடி"த்த சயங்கோண்டான் வேறு. இருவர் சயங்கொண் டார்.

அநுராசபுராக் காடுவருகிறது. பெண்கள் கவனம்!

வண்ணானின் மொழிகேட்டு
வனம் விடுத்த சீதைதனை
இந்நாளுந் தேடுதல்போல்
இருங்குரங்கு நெருங்கிடுமே.

மான்குளத்திலே ஒரு சிறு புதினம் இல்லை! இல்லை!

காமர்நெடுங் காட்டினிலே
காணுமொரு மாபுதினம்
மாமரைகள் ஒலிகேட்டுத்
தாமரைகள் ஆயினவே.

நிறுத்துங்கள் பஸ்வண்டியை.

முன்னவன் செங்கைத் தனுவிற்
பாரதத்தைப் பொறித்த
முறிகண்டி வாரணத்தின் முளரியடி பணிவாம்.

அஸ்தமயனத்துக்குமுன் யாழ்ப்பாணம் போய்ச்சேர்ந்து விடுவோம். அப்பாலே உங்களைச் சந்திக்க முடியாது. இடையிலே சொல்லி வைக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் உங்கள் கிராமங்களில் உள்ள பள்ளிக்கூடங்களுக்குப் போய்,

இலங்கைவளம் கேளாத
செவியென்ன செவியே
இரும்பாலே செம்பாலே
செய்திட்ட செவியே.

என்று தாளம் பிசகாமற் பாடவேண்டும்; மறந்து போகக் கூடாது.

பனை தெரிகிறது.

கோணிலைகள் மாறிமழை வாரிவறந் தாலும்
கொடியமிடி வந்துமிக வேவருத்தி னாலும்
தாணிழ லளித்துயர் கலாநிலைய மேபோல்
தந்துபல வேறுபொருள் தாங்குபனை யோங்கும்.

எண்சா ணுடம்புக்குச் சென்னி சிறந்திடும்
என்றே யுரைப்ப ரதுபோலப்
பொன்சே ரிலங்கைச் சிரமென வேவரும்
புண்ணிய.மோங்கிடும் யாழ்ப்பாணம்.

வாருங்கள் நல்லைக் கந்தசுவாமி கோயிலுக்குப் போவோம்.

முன்னம் புவனேக வாகு மணிநல்லை
முன்னி வகுத்திடும் வேற்கோட்டம்
மன்னு முயிர்கட் கிருவகை நோய்கட்கும்
மருந்து கொடுக்கும் அருட்கோட்டம்

எங்கள் பிரயாணத்தில் ஒரு பெருந்தவறு செய்துவிட்டோம். இலங்கைமாதேவிக்கு இரு விழிகள் திருக்கேதீச்சரம், திருக்கோணமலை. அந்த இரு திவ்விய சேத்திரங்களையும் தரிசித்தன்றி வீடுசேர்வதில்லையென்று சங்கற்பஞ் செய்யுங்கள்.

மூன்று வயசிலே மந்திரவாசகம்
முன்னம் மொழிந்தவன் சொன்னபதி
தோன்றுமுக் கோண மலையுட னேகேது
சூழ்ந்து வலஞ்செய்கே தீச்சரமே.

திருக்கோணமலையை வலஞ்செய்ய முடியாது. கடல் திரை மோதுகின்ற ஆழத்தில் உள்ள கற்பாறைமீது தேங்காயை வீசுங்கள்.

பிரயாணத்திஞல் உங்கள் சரீரம் அலுத்துப்போய் விட்டது. இலங்காதேவி — எங்கள் இயற்கை அன்னை — ஏழுகிணறுகளில் வெந்நீர் வைத்துக்கொண்டிருக்கின்ருள். ஏழு கிணறுகளிலும் முழுகுங்கள்; முழுகிக் களியுங்கள்; அலுப்புத் தீருங்கள்.

காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று
கவிபாடிப் பரிசுபெறுன் மனம்போல ஒன்று
தீதுப்பழி கேட்டவன்தன் மனம்போல ஒன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம்போல ஒன்று
நீதிபெரு வேழைதுயர் மனம்போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம்போல ஒன்று
காதுமழுக் கீறுடையான் மனம்போல ஒன்று
கனலேறு மெழுநீர்கள் உண்டுகன்னி யாயில்.

வெந்நீர் ஸ்நானம் ஆயிற்று. சப்த தாதுக்களும் சுகம் பேசுகின்றன. உடல் பூரிக்கின்றது.

இனி,

நமது உள்ளமும் உணர்ச்சியும் தெவிட்டாது தித்திக்க,

ஆடிப் பிறப்பொடு கத்தரித் தோட்டமும்
ஆக்கி அளித்த புலவர்பிரான்
தேடக் கிடையாத தென்னிலங்கை வளன்
தேன்சொரி யுந்தமிழ் மாந்துதுமே.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இலங்கை வளம்

## காப்பு

பூவுலகிற் பொன்னுலகம் போன்றதெனப் புலவர்
புகழ்ந்துரைக்குந் தென்னிலங்கை வளம்பலவும் புகல
மூவுலகுங் கைகுவிக்கு மாணிமரு தடியில்
முளைத்தெழுந்த வோங்கார முதல்வனடி பணிவாம். 1

மன்னுமணித் தீவமென மேகலையி னுரைத்த
வற்றாத வீழவள மண்டலச்சீர் வழுத்த
முன்னவன்செங் கைத்தனுவிற் பாரதத்தைப் பொறித்த
முறிகண்டி வாரணத்தின் முளரியடி பணிவாம். 2

வட்டநெடுங் கடனடுவே மாங்கனியி னுருவாய்
மன்னுமுயர் தென்னிலங்கை மாண்புதமிழ் பாட
அட்டகிரித் திருத்தளியி லெமக்கருளத் தோன்றும்
ஆறுமுக வேலனிரு சீறடிகள் பணிவாம். 3

வையமெனு மாமடந்தை வாள்விழியென் றோத
மன்னிவளர் பொன்னிலங்கை மாண்புதமிழ் பாடப்
பொய்யர்புரை நாவெறுக்குஞ் செய்யதமிழ்ச் செல்வி
பூங்கமலச் சேவடிகள் போற்றிசெய்கு வோமே. 4

வாசலிலே கண்டவுடன் வருகவென வழைத்தே
மதுரமொழி யளவளவி வந்திருந்து கலந்து
பேசரிய ஞானவழி பேசியெமை யாண்ட
பெரியவனை யுரியமுறை பேணியுரைப் போமே. 5

### அவையடக்கம்

செந்திருநா யகன்வளரும் பாற்கடலை யுறிஞ்சச்
சிற்றெறும்பே யுற்றெழுந்த செய்தியெனச் சிறியேன்
வந்துமணி சிந்துகடல் இலங்கைவளம் புகல
வலித்தபிழை பொறுத்தருள்வீர் வண்டமிழ்ப்பா வலரே.

## நூல்

### இலங்கையின் தோற்றம்

மாமேவு மிந்துமகா வாரிதியென் றோதும்
வலம்புரிசூ லுளைந்தீன்ற வண்டரள மாகும்
பூமேவு மடமாது தோழியரோ டாடும்
பூங்காவு மாகுமெங்கள் பொன்னிலங்கை நாடு. 7

கடகரியின் முத்திலங்குங் கடன்முத்து மிலங்குங்
கழைவெடித்த முத்திலங்கும் கதிர்மணிக ளிலங்கும்
இடுமரவின் மணியிலங்கு மெழிற்பசும்பொ னிலங்கும்
ஏரிலங்குஞ் சீரிலங்கு மெழிலிலங்கை நாடு. 8

செந்நாவ லர்புகழுந் தென்குமரி கண்டம்
சிந்துபெரு கிக்குமரி யாற்றினொ டழித்த
அந்நாளி லந்நாட்டில் மிஞ்சிநின்ற திந்த
அலங்கார விலங்கையென வறைவர்பழம் புலவர். 9

### இலங்கையின் வடிவம்

செந்தார்ப் பசுங்கிளியின் நாசியென வளைந்த
தேமாவின் கனிபோலத் திருவுருவ மிலங்கும்
பைந்தாதும் கருந்தாதும் பசுந்தாதும் நிறைந்து
பரந்தாதி நாளிலயன் படைத்தவெங்கள் நாடு. 10

### இலங்கைப் பெயர்கள்

வேறு

செம்மை சேர்திருத் தாமிர வர்ணியே
சீதை தங்குத போவனச் சூழலே
மும்மை யுந்தரு மாணிக்க தீவமே
முடிவி லாதுறை சிங்கள தேசமே. 11

வெம்மை விற்கொடிச் சேரன்து வீபமே
வேதங் கூறி விடுமிடை நாடியே
இம்மை யேவரு மிந்திர லோகமே
ஈழ மேயெம் மிலங்கையி னுமமே. 12

## இலங்கையின் எல்லை

பார்வ டக்கினிற் பாக்கெனு நீரிணை
பகர்கிழக்கில் வங்காள விரிகுடா
நேர்குடக்கினுந் தெற்கினு மோதைநீர்
நீல வாரிதி யிந்துச முத்திரம். 13

## இயற்கையமைவு

நீர்மி குத்தந டுப்புறம் வானளாய்
நிமிர்ந்து நீடு மணிமுடி போலுறச்
சேர்பு டைப்புறந் தாழ்தலிற் புட்பகத்
தேரெ னத்தனி செப்பிட நிற்குமே. 14

## இலங்கையின் முன்னரசு

வேறு

சீரள காபுரி மாநகர் காவல்செய்
செல்வக் குபேரனி னன்னாடு
போர்புரி ராவணன் வீரியத் தாற்கொண்டு
போற்றிய மாற்றரும் பொன்னாடு. 15

தங்கைசொற் காத்திட வந்த ரகுராமன்
தையலை மீட்டிடத் தம்பியுடன்
வந்தணை கோலியே வெந்திற லிராவண
மன்னனை வென்றிடுந் தென்னாடு. 16

பின்னாள் விபீடண னுண்டு பிரிந்தபின்
[illegible]சு மியக்கரு நாகருமாய்ப்
பல[illegible] ளரசுபு ரிந்திட நின்றது
[illegible]ர்புக ழீழப் பழநாடு. 17

## இலங்கையின் பின்னரசு

வங்கத்துச் சிங்கன் மரபினில் வந்திடு
வாள்விச யன்தன தோழருடன்
அங்குப் புகுந்துகு வேணியைக் கூடியே
ஆட்சி புரிந்தது மிந்நாடு. 18

பொங்குபு கழ்தங்கு வாள்விச யன்வழி
போந்திடு சிங்கள வேந்தர்களும்
தங்குசெ ழுந்தமிழ் மண்டல மன்னரும்
தாமுறை யாண்ட தனிநாடு. 19

சீருறு சிங்களர் வீரத் தமிழரைச்
சீறியெ திர்த்த பறங்கியரும்
போருறு மொல்லாந்த மன்னரும் போய்விடப்
புண்ணிய வாங்கில ராள்நாடு. 20

## இலங்கையைப் பாடிய பழைய புலவர்கள்

### வேறு

மன்னுபுக ழீழத்துப் பூதன் றேவன்
மாநகரப் பாலைதரு கண்ண னாரும்
பன்னுவஞ்சி யிளங்கோவுஞ் சாத்த னாரும்
பரஞான முண்டருளும் பாவ லோரும்
அன்னவயற் கச்சியப்ப முனியும் கம்பன்
ஆகுமருட் கவியரசும் அறுமு கன்மேற்
சொன்னபுக ழருணகிரிப் பெருமான் தானும்
துதித்தபெரும் புகழ்கதித்த தொன்மை நாடு. 21

## இலங்கை நீர்வளம்

### வேறு

எஃகிய பஞ்சினைப் போலத்—தமிழ்
எல்லாள மன்ன னிருதயம் போல
வெஃகிய வெண்முகிற் கூட்டம்—இந்து
வெண்டிரை மேயவெ ழுந்திடு மன்றே. 22

ஈயாத வற்சரின் வௌவி—நல்ல
இரவலர்க் கீகின்ற புரவலர் போல
ஓயா வுவர்க்கட லள்ளி—மிக
வுண்டு திரண்டு புரண்டெழு மேகம். 23

கல்லா தவர்மனம் போல—அன்றிக்
கடுகணைக் குகைவரு கனையிருள் போல
அல்லா தழுக்காறு கொண்டோர் - மனம்
ஆமென வேயிருண் டங்குசூல் கொண்டே. 24

செங்கதி ரோன்தனை யெள்ளி—நின்று
சிரிப்பது போல விடையிடை மின்னி
அங்கவ னோடறை கூவி - எதிர்த்
தார்ப்பது போல விடித்துமு ழங்கும். 25

கைம்மலை கன்மலை போலப்—பெருங்
காண்டா மிருக நிரைகளைப் போல
மைம்ம லிராவண னேவும்—மூல
மாபல மென்னவும் வந்து குவிந்து. 26

வேறு

பாத பங்கய மலையின் மீதினும்
பகருபே துரு மலையின் மீதினும்
ஓது கதிரைமா மலையின் மீதினும்
உயர்த்த வன்னியா ரணிய மீதினும். 27

பார்த்தி டாதகட் டோகை யாலிடப்
பாம்பொ டுங்கிடக் காந்தள் வாய்விட
வேர்த்த வெம்மைபோய் வளிகு ளிர்ந்திட
வேறு வேறுபோய்க் கால்க ளூன்றியே. 28

கொடைம டம்படுங் குமண மன்னவன்
கூறு சித்திரப் புலவ னுக்கருள்
மடைதி றந்திடுங் கொடைவி தங்கள்போல்
வயிறு ளைந்துமா மழைசொ ரிந்தவே. 29

## அருவி வீழ்ச்சி

அரசு நீழலிற் புத்த மாமுனி
ஆறு வற்சரம் பெற்ற யோகினைப்
பரவு பாரினுக் கருளு மாறுபோற்
பாத பங்கயத் தருவி பாயுமே. 30

ஏசு வென்றிடும் ஞான பண்டிதன்
ஏறி மாமலைக் கூறு நீதிபோற்
பேசு மாமுகில் சொரிய வாங்கியே
பேது ருமலை யருவி பாயுமே. 31

உண்ட செந்தமிழ்ச் சைவ நூலமு
தோங்க நல்லவந் தருளு நாவலன்
கண்ட னப்பிர சங்க மாமெனக்
கதிரை மாமலை யருவி காலுமே. 32

துக்கி புக்கவை யருவ ருப்பினாற்
கொட்டி விட்டிடுங் கொள்கை போலவே
மைக்கண் மாமழை வழங்கு வாரிநீர்
மலைக்க ணின்றிழு மென்னப் பாயுமே. 33

வேறு

ஓடுமா தங்கமே உருளுமா தங்கமே
வீடுமா நாகமே வீழுமா நாகமே. 34

அழியுமா மாவினம் அறையுமா மாவினம்
கழியுமா வாரமே கனகமா வாரமே. 35

பாயுமே வேங்கைகள் பறியுமே வேங்கைகள்
சாயுமே பலவுமே தள்ளுமே பலவுமே. 36

வேறு

சரிந்த வேங்கை முரிந்த கோங்கு
தகர்ந்த சாந்து விழுந்தவே
யிரிந்த மிருக மெழுந்த பறவை
இழிந்த அருவி கழிந்தவே. 37

உருண்ட சிலைகள் ஒழிந்த வவல்கள்
உயர்ந்த மேடு பதிந்தவே
வெருண்ட கரடி விளிந்த வரவு
மிகுந்த வருவி பாயவே. 38

வேறு

பூங்கு றிஞ்சிமு கட்டினி லேறிப்
பொழிந்த தெள்ளமு தாகிய வெள்ளம்
பாங்கி லாதப ரத்தையை நாடிப்
படரு வோரிற் படர்ந்தது பள்ளம். 39

முன்னை பூத்திடும் முல்லையிற் போன
முளரி பூத்திடும் மருதத்திற் போன
புன்னை பூத்திடும் நெய்தலிற் போன
போகும் போகுந் துறைதொறும் போன. 40

செப்பு மத்தளம் கொட்டுங் கரம்போற்
சிறையசைத்துச் சிரலினம் மேவும்
கொக்கு நாரையும் மீனினங் கொத்திக்
கொண்டெ ழுந்துவி ழுங்கிவிக் கும்மே 41

மங்க லந்திகழ் மாப்பிள்ளை மார்வர
மாமன் பக்கம் வரவெதிர் கொள்ளல்போற்
பொங்கு வெள்ளப் புதுமண நீர்வரப்
புரளு மீனிரை போயெதிர் கொள்ளுமே. 42

வேறு

ஒருபாலுங் கோடாம லறப்பால்வந்
துயிர்புரக்கு மொருவன் போல
இருபாலும் நுரைபுரட்டி யெப்பாலும்
மாவலிநீ ரிழியு மன்றே. 43

அத்தியிலத் தியுஞ்சாந்து மாரமுந்தா
ரமுமள்ளி யகன்று துள்ளித்
தத்தியிரு கரைபுரண்டு தாய்நாடி
மாவலிநீர் சரிந்த தன்றே. 44

வேறு

சீரான வெந்நாடு மெப்பதியு மூருஞ்
சேர்வான தாவரமு மாமரமுங் காவும்
பேரான பழமரமும் பெருமரமும் பூவும்
பெரிதான பனைமரமும் வாழையொடு தாழை
நேராக வோரிடத்தில் நிலையாகக் காண
நிலமடந்தை வைத்ததென நின்றுபய னுதவும்
பேராத னைப்புதிய நந்தவன மகவைப்
பேணியமு தூட்டிமகா வலிகங்கை பெருகும். 45

வேறு

கண்டாலுங் கேட்டாலுங் கழுவி னாலுங்
கைதொட்டுத் தெளித்தாலுங் காத லாக
உண்டாலு முரைத்தாலும் வினைகள் யாவும்
ஒருக்காலும் நெருக்காம லோட்டித் தேவர்
கொண்டாடும் படியோடும் புனல்சேர் சோதி
குலவுமணி மாணிக்க கங்கை குன்றஞ்
சென்டாடி வென்றவயிற் குமரன் மேவுந்
திருக்கோயில் வலஞ்செய்து சேரு மன்றே. 46

மன்னுமா வலிகங்கை கானு கங்கை
வளர்கழனி கங்கைமா ணிக்க கங்கை
இன்னுமுள பலநதிகள் வழியா யோடி
யெங்கெங்கு மணக்கோல மியையக் காட்டிக்
கன்னியிள வாழைதெங்கு பலவு பூகங்
கன்னலொடு செந்நெல்வளங் கலிக்க வீந்தே
அன்னைதனை யுன்னிவினை முடித்து மீளும்
அடல்மைந்தன் போற்கடலை யடையு மாதோ. 47

வெற்றிவேற் பராக்கிரம வாகு வென்னும்
வேந்தனுடன் போர்புரிந்து வெருவி யோடும்
பற்றலரிற் பன்மடங்கு வேக மாகப்
பனியருவி சலசலெனப் பாய்ந்தே யோடி
மற்றவர்க ளொளித்துவிடந் துருவு மாபோல்
வனமெங்கும் வயலெங்கும் வளைந்து கால்போய்க்
குற்றமிலா யாழ்ப்பாணப் பனைபோல் யாண்டும்
குவலயத்திற் பலபயனைக் கொடுக்கு மாதோ. 48

ஙஐ

வேறு

முன்னமய னுலகத்தைப் படைக்க வெண்ணி
முதற்படைத்த விடமிதென மொழிய நின்ற
தென்னிலங்கை முழுவதுமே திருமா லானற்
சிரமாகும் யாழ்ப்பாணஞ் சேரு முந்தி
பன்னுபுகழ்ச் செங்கடக நகரி யாகும்
பாதமலை யுந்தியந்தா மரைய தாகும்
நன்னர்மலைக் குவடுகளோ நளினந் தோன்றும்
நான்முகனென் றேபுலவர் நவிலு வாரே. 49

வேறு

பொன்னக ரிந்நக ரொக்கும்—என்று
புலவர்கள் சொன்னது பொய்ம்மையோ மெய்யோ
அன்னது காண்குவ மென்றே—உயர்ந்
தந்தர மீதி லெழுந்த மலைகள். 50

வேறு

கூடு துன்பினு லழுது வாடிடும்
கோதை மாரெனக் குந்த லம்விரித்
தாடு மெல்லிலைத் தித்தி வான்பனை
அமுது கட்டியு முதவு மங்ஙனே. 51

ஏல மோடில வங்கஞ் சாதிமே
லேறு வெற்றிலைக் கொடிக றிக்கொடி
மேலெ ழுஞ்சுர நாய கன்னொடு
வேறு கொக்குமா மரமும் மேவுமே. 53

வேறு

சூரியவெங் கணைப்புட்டில் முதுகிற் கோக்கும்
குலவீர ரெனமுதுகிற் கூடை வீக்கிச்
சீரியமங் கையர்கூடி மலைமே லேறித்
தேயிலையின் தலைமேவு மிலைகொய் வாரே. 53

வேறு

வான ளாவிய மலைமு கட்டிலே
வந்து மாமழை யமுது வார்த்திடத்
தேன ளாவிய மலர்ம ணக்குமே
சிலையெ னப்பல நிறம ணக்குமே 54

தாயெ னச்செழும் பால்சு ரந்திடும்
தருவ ளர்ந்திடும் முடிய ரிந்திட
மீயெ ழுந்தலை யிராவ ணன்னென
மேவு தேயிலை தாவி யோங்குமே. 55

வேறு

காந்தளெனுங் கரத்தினிலே கத்தி யேந்திக்
கலனேந்திச் சிலமடவார் கதைத்துச் சென்று
பாய்ந்திடுபான் மரங்களரிந் திழிந்த வெண்பால்
பாகஞ்செய் திடவெடுத்துப் படர்வ ரன்றே. 56

வேறு

கான வாழையின் கவிழ்மு கக்குலை
கவைகொள் தீம்பலா முட்பு றக்கனி
ஆன வண்டியிற் காவி னிற்சுமந்
தவைகள் சந்தையிற் கூறி விற்பரே. 57

## வயல்

உலகி லேவரு முயிர்க ளுக்குயிர்
உண்ணு நீருட னுணவு மென்பரால்
அலகி லாவுயிர்க் கமுத ளித்திடும்
அஞ்சொற் கழனிக ளாற்றும் பாங்கெலாம். 58

மாம ழைப்பெரு நீர்மி குத்திட
வயலில் மள்ளர்கள் வந்து கூடியே
ஆழ டைப்படைத் துழுது பசளையிட்
டகல்ப ரம்படிப் பவர்கள் கம்பலை. 59

களைப றிக்குநர் முளைவி தைக்குநர்
கால்வி டுக்குநர் சால டிக்குநர்
விளைவெ டுக்குந ரருவி வெட்டுநர்
விண்ண ளாவிய போர டுக்குநர். 60

புதிதெ டுக்குநர் உணவு கொள்ளுநர்
பொங்கல் செய்குநர் பூசை செய்குநர்
அதிதி கட்குமா துலர்க ளுக்குமுண்
அருளு கின்றவ ரமலை யோங்குமே. 61

தீர னாகிய துட்ட கைமுனு
செய்த போரிலே சிந்து ரக்குலம்
வீர ரைத்துவைத் தென்ன மேதியால்
மேவு போரினம் விட்டு ழக்குவர். 62

வேறு

போரி னைப்பெரும் போத்தினிற் கொன்றுநெல்
பொலிபொ லியெனப் போற்றித் தொகுப்பரே
ஏரின் மங்கலம் பாடி யுவப்பரே
ஏழை யர்க்கருள் மேழிவே ளாளரே. 63

வேறு

ஆனை யின்பழுப் போல வேவளைந்
தணிய ரம்பைகள் கனிக ளீனுமே
தேனை யுந்திடு மதுர மாங்கனி
சித்தி ரக்கிளிச் சொண்டு மானுமே. 64

மணம்வி ரித்திடுங் கவரி வாங்கிடும்
மாம ணித்திரட் குலைகள் தூங்கிடும்
பணம்வி ரித்தெனப் பாளை தாங்கிடும்
பவள மாமணிக் கமுகு தேங்கிடும். 65

வேறு

தேமாவி னிளந்தளிரை யலகினுற் கோதித்
தீங்குயில்க ளிசைபாட மயிற்குலங்க ளாடும்
இராமாய ணக்கதைகள் பூவையினம் படிக்க
இனியமகா வமிசகதை யிளங்கிளிகள் நொடிக்கும். 66

மாமருதி னீழலிலே மந்தியினங் குந்தி
மாதவரெ னப்பெரிய காவடியெ டுத்துத்
தாதிமிதி மித்தியென வாடிவர வரிகள்
சங்கினொடு காகளமி சைத்துவரு மன்றே. 67

## வயலும் சிறுகாடும்

வேறு

மருதநில வயலடுத்து மணிப்புறவச் சிறுகாடே
உரியநிரை வெளிவயல்கள் ஊருறைவார் கோவலரே. 68

வருங்கோட்டுப் பிறையரிந்து மாறேரட்டி விட்டதென
இருங்கோட்டு மேதிநிரை எற்கோட்டில் மேய்ந்திடுமே. 69

புலவழியும் புல்வழியும் போய்மேய்ந்து புனலுண்டு
நிலவெளியிற் பசுநிரைகள் நிழலாறி யொதுங்கிடுமே. 70

நயந்தடிக்குங் கைம்மணியின் நாக்குப்போ லதழ்தூங்க
வியந்தெடுக்கும் பலநிறத்து வெள்ளாடு வெறியாடும். 71

பாலுடைய மேதியினம் பசும்புல்லை மேய்ந்துபோய்ச்
சேலுடைய குளச்சேற்றிற் சேதாம்பல் குதட்டிடுமே.

வேறு

பொன்சொரியுங் கொன்றைநெடும் பழமெடுத்துத் தளைத்துப்
புன்மயிர்நெய்த் தலைச்சிறுவர் பாடியிசை விளைப்பர்
வன்னமயில் குஞ்சினொடு புறவுகுளக் கோழி
வாத்துமுதற் பலபறவை மனையினிலே வளர்ப்பர். 73

வேறு

போது கைத்தலங் கலகலத்திடப்
புலிகொ லென்றயல் விலவி லத்திட
மாதர் மத்தினிற் றயிர்க டைந்திடும்
மாமு ழக்கமே மழைமு ழக்கமே. 74

வன்ன மட்கலம் பால்நி ரப்பியே
வைக்கோல் வட்டணை யிற்சு மந்துகொண்
டந்நன் னாட்டினில் விற்கு நாரிமார்
அன்ன நன்னடை யன்ன நன்னடை. 75

சேனை வித்துவார் வரகு வித்துவார்
செந்நெல் நத்துவார் பன்னம் பொத்துவார்
ஆநெய் விற்றுவா லரிசி பெற்றுமே
லாசை யற்றுவா ழாயர் முற்றுவார். 76

வேறு

பாறை போலவே சேற்றிற் கிடக்கின்ற
பகட்டி னங்களிற் கொக்கினம் மேவியே
கூற தாகிய மூக்கினிற் குத்தியே
கொல்லு மீக்களை மெல்ல விழுங்குமே. 77

காடு

இருவினையின் தொடர்பதனா லினியவுயிர்த்தொகையடைய
வருபிறவிக் காட்டினிலும் வன்னிவருங் காடதிகம். 78

மும்மதத்து நால்வாயும் முளையெயிற்றுப் பேழ்வாயும்
வெம்மதத்த கொடுவரியும் மிகவடுத்து நரிதிரியும். 79

கலைமதியிற் குடியிருக்கிற் கரும்பாம்பு தீண்டுமெனத்
தலைமதனிற் குடிபுகுந்த சசியினங்கள் தாவிடுமே. 80

தேன்போலும் பணிமொழியார் திருவிழிக்கு நனிதோற்று
மான்போகி மறைந்திருந்து மருண்டிருண்டுநோக்கிடுமே. 81

வண்ணானின் மொழிகேட்டு வனம்விடுத்த சீதைதனை
இந்நாளுந் தேடுதல்போ லிருங்குரங்கு நெருங்கிடுமே. 82

காமர்நெடுங் காட்டினிலே காணுமொரு மாபுதினம்
மாமலரைக ளொலிகேட்டுத் தாமரைக ளாயினவே. 83

வேறு

கண்டி யாண்ட கடைசி யரசனின்
கருணை தீர்ந்த மனமென வேகறுத்
தண்டி யோங்கு மருங்கருங் காலியே
அலரி லோங்கு மறுகருங் காலியே. 84

வேறு

தரைப்பாலைப் பருக்கவரும் தழற்பாலை யிலையெனினும்
நிரைப்பாலை மரப்பாலை நெறிப்பாலே நின்றிடுமே. 85

வேறு

காவந் தீசன் மகன்தமிழ் மன்னரிற்
காட்டு கைப்பெனக் காணினுங் கைத்திடும்
பூவில் வற்சரைப் போலப்பொ லிந்திடும்
பூத்துக் காய்த்திடும் எட்டி மரங்களே. 86

தூக்கு விந்தனை வார்சிலை வேடர்கள்
தொன்னை தைக்க விலைகள் பறித்திடும்
தேக்கு மாமரம் ஆதி மரமெலாம்
செறிந்தி ருக்குமச் செந்நெலின் வன்னியே. 87

காவி ரிக்குழன் ஞளுண வீந்திடுங்
கழனி சூழ்ந்த வளமிகு மிப்பதி
பூவி ரித்திருள் பொங்கு மடவியாய்ப்
போன தேயெங்கள் பொல்லாத காலமே. 88

வேறு

தங்கும் புகழ்நாகை தீவு — சூழுஞ்
சமுத்திர மத்தியிற் குளித்தெடுத் திட்ட
சங்கு புரைமுடி கொண்ட — நல்ல
தவயோகரு மெங்குஞ் சார்ந்திடு வாரே. 89

வேறு

தேனி ருலைச் சசியென வெண்ணியே
சீறி நாகம் படமெடுத் தாடிட
வானு லாவுங் கலுழன் விழுந்ததை
வாரித் தூக்கி வயிற்றுண வாக்குமே. 90

வைக்கோல் வேய்ந்திட்ட மண்செய் குடிசையும்
மரத்தில் வேய்ந்திடு வன்னப் பரண்களும்
ஒக்க லோடுற வாடிடும் வாழ்க்கையும்
உள்ள முல்லைப் புறவத்தி னூர்களே 91

சீறி யாழ்நகர்ச் சிற்றம் பலவனூர்
செய்த தூய வடிசினன் னூலிலே
கூறு பல்சுவை யுண்டிகள் போலவே
குலவு பலபழங் கொம்பினிற் கூடுமே 92

வயிறு வீங்கிய மந்திக் கருத்திட
மதுரப் பாலைப் பழம்பறிக் கின்றுழி
மூயிறு குத்த முசுக்கலை யாடிடும்
முந்தை யாடிய சக்கர மாநடம் 93

மாலைக் காலம் வனத்தைக்கண் காணிக்க
வந்த வாவல் பறக்க வதன்பினே
வேலைக்கார ரெனவிளக் கேந்தியே
மின்மினிக்குல மோடும் விரைவிலே 94

வேறு

கட்டிவிட்ட கீருங்குழலிக் கூட்டையொரு கடுவன்
கல்லாலே யெறிந்துடைக்கக் கலைந்தகடுங் குளவி
கொட்டிவிட வக்கடுவன் கூனிநடு நடுங்கல்
குளிர்சுரத்து முன்னர்வரு குலைப்பனது நடுங்கல் 95

புதர்மலர்ந்த காந்தளினை விடப்பாம்பென் றஞ்சிப்
புளினியின மெச்சரிக்க அணில்தந்தி புகல
வதியுமிளம் பூவையினம் கேட்டுவாய் பொத்த
மலர்கின்ற பனிமுசுண்டை மடமைகண்டு சிரிக்கும். 96

**கடல்**

இலங்கைமகா நாடென்னும் பசுங்குழவி தன்னை
இனியமதி யகடுபொதிந் தீன்றெடுத்த தந்தை
கலங்கலிலாப் பொன்னருணை சலந்துரைதான் கற்ற
கல்வியென வாழ்ந்தகன்ற கடல்சூழு நெய்தல் 97

வேறு

வாங்குசிலை யிராமனணை கட்டவரு நாளில்
வானரமு ழக்கியவ ருத்தமினு மாறு
தேங்கியலை வீங்கிவிழுந் தேறிநுரை சீறி
இன்னுமழு கின்றதென மன்னுமுயர் வாரி 98

அன்னமென மன்னுநடை யம்பிகளி லேறி
ஆடவர்கள் மாமகர மாமைபல மீனம்
வன்னமட மாதர்விழி வீசுவலை போல
மாயும்வலை வீசியவை வாரிவரு வாரே 99

இப்புரவு செய்யுமவர் கட்கவைப கர்ந்து
தொலையா திருந்தவைத மைச்சரிபி ளந்தே
உப்புதறி வெப்புறவு டற்றியவு ணங்கல்
ஊர்தொறுமெ டுத்துவிலை யோதிவரு வாரே. 100

வேறு.

மான வேல்விழி மங்கையர் கொங்கைபோல்
வளருந் தெங்கி னிளங்குலை தூங்குமே
ஆன விராவணன் மூலப லச்சிரம்
அற்ற தென்ன வரும்பழ மீண்டுமே. 101

மன்னர் போற்று மிராமசன் றூதனின்
வாத தோரணி வாய்மொழி யென்னவே
தென்னை நேர்நிரை யாகநி வந்துகாய்ச்
சீரும் மேவிவெண் செய்யுளை நேருமே. 102

வேறு

தென்னைதரு மட்டையினி லேகயிறு செய்வார்
தேங்காயி னெய்யொடுபிண் ணாக்குவரு விப்பார்
மன்னுமிள நீரன்றி மதுவுமருந் திடுவார்
வாரிபுடை மேவவரு காலிநகர் மாக்கள். 103

உண்ணமுடி யாதகட னீரினிலி ருந்தே
உப்புவரு விப்பரதை யொத்தசுவை யுண்டோ
வண்ணமிகு வேறுபல கைவினைகள் செய்வார்
வாரிபுடை மேவவரு நெய்தல்நில மாக்கள். 104

**நதி கடலுடன் கலத்தல்**
வேறு

அடுக்கு ஞெண்டு குடைகள் பிடிக்க
ஆல வட்டந் திருக்கை யெடுக்க
நடுக்குஞ் சுறவு நாந்தக மேந்த
நல்ல கணவாய் கவரி யிரட்ட. 105

முன்னே யாமை பரியஞ் சுமக்க
முரல்கள் சின்ன மூதி நிற்க
மன்னு திரைகள் முழவ மியம்ப
வாரி மணக்கும் நதியையே. 106

யாழ்ப்பாணநகரம்

வேறு.

எண்சா ணுடம்புக்குச் சென்னி சிறந்திடு
மென்றே யுரைப்ப ரதுபோலப்
பொன்சே ரிலங்கைச் சிரமென வேவரும்
புண்ணிய மோங்கிடும் யாழ்ப்பாணம். 107

வேறு

மன்னுவட பாலினிலே நகுலமெனு மலையு
மாசழிக்கும் வரநதியும் வங்காளக் கடலும்
சொன்னவொரு மூன்றுமடுத் தடுத்தொரிடத் துடனுய்த்
தொடுத்திருக்குந் தொன்னகர மெந்நகரஞ் சொலவே. 108

ஈடிலாப்ப சுக்கொலைக்கு நேராது பயந்தே
ஞானகலை மாமுனிவ ரேடியது போல
ஆடியவர் தீவினைக ளோடவருள் கூடும்
அலைவாயிற் புண்ணியசீ ரமைந்ததெங்கள் நகரம். 109

அஞ்சவித்த மாமுனிவன் கீரிமுகந் தீர்க்கும்
ஆசுகப்ர வாகவல்லி வாசிமுகம் போக்கும்
பஞ்சவர்க்குள் வாள்விசயன் பாவவினை நீக்கும்
பண்புடைய கீரிமலை யூறிவரு தீர்த்தம். 110

அந்நாளி லயன்படைத்த மலைநதிகள் போக
ஆறுமுக நாவலனு ரறிவுதுணை யாக
இந்நாளி லேபடைத்த தமிழ்மலையு மெங்கும்
இழுமெனவே யொழுகுசைவப் பேராறு மெங்கும். 111

வேறு

பொல்லாப் பறங்கிய ரொல்லாந்த ராமாலைப்
பொறியி னொரிந்த தமிழ் மக்கள்
மெல்லத் தழைத்திட வாங்கில ராட்சியால்
மேன்மை தழைக்குந் தமிழ்நாடு. 112

முன்னம் புவனேக வாகு மணிநல்லை
முன்னி வகுத்திடு வேற்கோட்டம்
மன்னு முயிர்கட் கிருவகை நோய்கட்கு
மருந்து கொடுக்கு மருட்கோட்டம். 113

நாறு கடம்பணி யாறுமுக வேலன்
நல்லையு மாவையுங் கந்தவன
மேறு திருத்தளி யோடு பலபல
இன்பத் தளிகொண்ட நன்னாடு. 114

வேறு

கோணிலைகள் மாறிமழை வாரிவறந் தாலுங்
கொடியமிடி வந்துமிக வேவருத்தி னாலுந்
தாணிழல ளித்துயர்க லாநிலைய மேபோற்
றந்துபல வேறுபொருள் தாங்குபனை யோங்கும். 115

வேறு

காகக் கருப்பச்சி தோரை—நல்ல
கருங்குந்தி செங்குந்தி கடும்பூ மணத்தி
ஆகப் பலபல சொல்லும்—சுவை
ஆன பனம்பழம் அகற்றிவிட் டோமே. 116

காடி தெளித்தெடுத் தேனும்—சிறு
கனலிலே சுட்டுப் பிரித்தெடுத் தேனும்
நாடி யிருந்துண்ணு வோர்க்குச்—சுவை
நல்ல திரட்சிப்பால் சீனியொவ் வாவே. 117

நுங்கின் சுவைதனைக் கூறின்—முன்னம்
நொந்தே வருந்தக் கடல்கடை வாரோ
இங்கிவை யாயிர மீயும்—பனை
எங்கள்நன் னாட்டினிற் கற்பக தாரு. 118

ஆரமு தைக்கையில் வைத்துக்—கொண்டே
அலமந்து கூழுக் கிரப்பவர்போல
ஏருடை யிப்பழம் பெற்றும்—வரும்
ஈச்சம் பழத்துக் கிரந்திடு வோமே. 119

நெற்றியில் வேர்வை நிலத்தில்—வீழ
நின்று வருந்தியு மோர்பய னில்லை
சற்றுமுன் னேற்றமு மில்லை—நல்ல
தலைவர்கள் வேண்டு மகன்றிடத் தொல்லை. 120

வேறு

எங்கெங்குங் கல்வினிலை யெங்கெங்குஞ் சங்கம்
எங்கெங்கும் வாலிபர்கள் திரட்சியிருந் தாலும்
அங்கங்கு மொற்றுமையு மன்புபொறை யில்லை
அழகான சொற்குவிய லுண்டுசெய லரிதே. 121

சைவமுதல் நாலுசம யங்களுள வெனினும்
தங்கள்சம யத்தினைய றிந்துநட வாமல்
நையவுரை கூறியொரு வர்க்கொருவர் சீறி
நையாண்டி செய்தல்தமிழ் நாகரிக மாமோ. 122

காளியொடு கூளிமக மாரியிவை முன்னே
கற்பனையி லாதவர்கள் வெட்டவழி கின்ற
கோழியுட னடுகுடி யோடுமலி வான
கொள்கையென நாடுபல குற்றமலி வான. 123

ஆண்களுக்கும் பெண்களுக்கு மறிவுவிழி திறக்க
ஆடகக்கி மூர்முத லறத்தலைவர் கழகம்
தேன்கடுக்கை யாரிருக்க வைத்தி லிங்கச்செட்டி
செய்தசிவன்கோயில்முதற்பலகோயில்திகழும். 124

வரராசர் மெச்சுபர ராசசே கரனு
மருகனு கியவரச கேசரியு மந்நாள்
ஒருவாத முத்தமிழ்ச் சங்கமது நிறுவி
ஓதுபல நூல்களருள் நாடெமது நாடே 125

அந்நாளிற் பரராச சேகரன் போலிந்நாள்
ஆரியத்தை யருந்தமிழை வளர்க்குமொரு சங்கம்
நன்னுவ லர்புகழும் ஐம்முகனு ரருளால்
நாலாறு வற்சரமாய் நடந்துவரு மன்றே. 126

கொழும்பு

அந்நாளிற் றலைநக ரான — அனு
ராத புரிமுத லவையெலாம் போன
இந்நாளிற் றலைநக ராகி — யுல
கெங்கணு மிளிர்வது மெங்கள் கொழும்பே. 127

வேறு

கலைப்பட்டினம் கரைப்பட்டினம் கலப்பட்டினம் பெருமை
தலைப்பட்டினம்வரைப்பட்டிடாத்தலைப்பட்டினம்கொழும்பு. 128

கண்ணாகினல் மற்றன்னது கதிராகுமே கழகம்
எண்ணாகிய வுயிராகுமே யிறைமந்திர சபையே. 129

விண்ணூர்திகள் நிலவூர்திகள் மின்னூர்திகள் பரிகள்
மன்னூர்திகள் எருதூர்திகள் மனுவூர்திகள் மிகுமே. 130

வேறு

கால டித்ததோ கடலெ ழுந்ததோ
கடலு டன்பெருங் கூாலெ ழுந்ததோ
போலெ ழுந்திரைந் தேமி குஞ்சனம்
பொழுது போம்வரை பூசல் பூசலே. 131

வானெ ழுந்திடும் பரிதி வானவன்
மறைந்த பின்னரு மொளிசெ யும்படி
தான னந்தமாய் வந்த தாலெனச்
சாருங் காந்தமின் சார தீபமே. 132

திணைம யக்கமும் பால்ம யக்கமும்
திசைம யக்கமு முரைம யக்கமுங்
குணம யக்கமும் குடிம யக்கமும்
கொழும்பு மாநகர் குமில திமிலமே. 133

கைதொ டவெழுஞ் சிறிய கந்துகம்
கால்தொ டவெழும் பெரிய கந்துகம்
மெய்தொ டவெழும் விரைவு கந்துகம்
மேவு மேவிளை யாடி டந்தொறும். 134

மன்னு மங்கையர் கணவ ரோடுபோய்
மாலை மாலையா யுலவு வாரலாற்
கன்னி மாரொடு காளை மாருலாங்
காலி மாமுகங் கவினு மாமுகம். 135

**காலிமாமுகம்**

வேறு

மன்னார்க் குடாக்கடலில்
மறிச்சுக் கட்டித் துறையதனிற்
பொன்னார்ச லாபமதிற்
போய்க்குளித்த முத்தெனவே 136

போய்க்குளித்த முத்தெனவே
புதுநகையுங் கயல்விழியும்
வாய்த்தவிள மங்கையரும்
ஆடவரு மாடுமிடம் 137

வேறு

கலைசேர்ந்த புத்தகங்கள் சித்திரவோ வியங்கள்
கதிர்மணிக ளணிநகைகள் கத்திமுதற் படைகள்
மலைசேர்ந்த பொருளரசர் வன்னமுடி கட்டில்
வணங்குபல தெய்வவுரு வங்கள்சிலை மரங்கள்
அலைசேர்ந்த கடற்பொருள்க ளிறந்தபல மிருகம்
அலங்கார பூதங்க ளளவிறந்த தொகுத்த
நிலைசேர்ந்த கொழும்புநகர் நூதன சாலையினை
நினைக்கவுரைத் திடமனமு நாவுநிமி ராவே. 138

வேறு

ஆர்த்தகடற் புடவியிடத் துள்ளமிரு கங்கள்
அரும்பறவை யூர்வனநீர் வாழ்வனவ வற்றைப்
பார்த்தவுடன் சூவெனவே சனம்புகன்ற வாற்றாற்
பகருமதன் பெயர்சூவென் றுனதென்பர் பலரும் 139

பல தேசம் பலசாதி பலதொழிலி லுள்ளோர்
பலர்வந்து சேர்ந்ததனு லுடைநடைபா வனைகள்
பலவாகி யாசாரம் பழியாகிப் போன
பலகலைகல் விகளங்கே பயின்றிடுமென் றாலும். 140

கண்டவுடன் புரிவார்கள் கறுத்தவுடன் பிரிவார்
கற்புநெறி திரிவார்கள் காதலை வேரரிவார்
கொண்டபல சமயநிலை குலையாமற் காக்குங்
கொழும்புமலி சபைகளுடன் கோயில்களு முளவே. 141

அருள்ஞானப் பெருவள்ளல் புத்தர்பிரான் தொண்டர்
அறம்வளர்க்கும் பெரியோரா யங்கங்கே யிருந்து
மருளாலே வன்கொலையுங் குற்றங்கள் பலவும்
வளர்வதுவும் கலிகால மதமயக்க மாமே. 142

எவ்விடத்து மெவ்விதத்து மியற்றியபல் பொருள்கள்
யானவையுமொன் ருய்த்திரட்டி யினமினமாய்க் கூட்டி
அவ்விடத்துப் பார்வைக்கு வைத்திட்ட வகைபோல்
ஆவணவீ திகள்பலவா லங்காடி பலவால். 143

எங்கெங்கு நடக்கிற புதினங்க ளறிய
எறிதந்தி தொலைபேச விசைதந்தி மேலும்
அங்கங்கு நடப்பதனை யுடன்பேசுந் தந்தி
அணிதபா லாகாயம் போக்குவர வாமே. 144

வேறு

பூதியணி வேதியர்கள் ஆதியடி யார்கள்
போற்றிவர மங்கல வியம்பல முழங்கச்
சோதிவிரி வெள்ளிமணித் தேரின்மிசைத் தோன்றிச்
சூரனுர மோடுகடல் வாரிதொலை வாக
மோதியெழு மாயமலை யாறுதுகள் போக
முன்னுமுரு கேசனுயர் முத்துமணி வைவேல்
வீதிவழி யாகவரு மாதியுலாக் காணும்
விழிகள்கதிர் விழிகள்மணி விழிகளொளி விழிகள். 145

வேறு

மனுராசி யீடேற வருபுத்தன் பிறந்த
வைகாசிப் பூரணையி லவனடியார் கூடி
அனுராத புரத்தினிலே யன்புடனே நிகழ்த்தும்
அணிவிழவு காண்பார்கள் அருந்தவமே தவமே 146

### கண்டி மாநகர்

கண்டவுட னிலங்கையிலே யுயர்ந்தபதி யிதுவே
காண்டியெனக் கூறுதற்குக் கடவுள்படைத் திட்ட
மண்டுபல வளஞ்சிறந்த கண்டிநக ருயர்வு
மறுப்பவரார் மறுத்திடினு மலரயனுர் முனிவர் 147

மலைவளத்தைக் காண்பதற்கு மனங்கொண்ட விலங்கை
மாதேவிக் காகமல ரயனிதனை வகுத்தான்
நிலைவளரு மிந்நகரை யெடுத்துரைக்க வென்றால்
நெடுமுடியா யிரமுடைய படவரவு வேண்டும் 148

வேறு

புகழ்சிறந்த கபிலைநகர்ப் புண்ணியத்தாற் றோன்றிப்
பூதலத்தோர் நனிவாழப் போகங்கள் வெறுத்தே
இகழ்வுடைய பொருள்நோக்கி யுண்மைதனை நாடி
இனியவுயிர்த் துக்கமறுப் பேனென்று தேடி
மகிழ்வுடனே போதிநிழல் வீற்றிருந்து கண்ட
மாஞான முயிர்க்கருளி நிருவாண மான
தகவுடைய புத்தபிரான் தந்தமனை யுண்டு
சாற்றுபல மாடமொடு மாளிகைக ளுண்டே 149

வேறு

இந்நாளி லாளுகின்ற வாங்கிலரை யொழிய
எவரும்வெற்றி கொள்ளாத வெங்கள்நகர் கண்டி
அந்நாளி னரசாண்ட மன்னர்மணி முடியை
அரசர்பிரான் தரப்பெற்ற தணியிலங்கை கண்டி 150

வேறு

ஆனைநிரை துவசநிரை ஆடல்நிரை பாடல்
அடியர்நிரை யிரைதிரையி னதிகமென ஞான
மானவ னணிந்தமணித் தந்தவிழாக் காண
வானவரும் வந்திடுவர் மற்றெவர்வ ராரே. 151

## விசேட தலங்கள்

மூன்று வயதினிலே மந்திர வாசக
முன்ன மொழிந்தவன் சொன்னபதி
தோன்று முக்கோண மலையுட னேகேது
சூழ்ந்து வலஞ்செய் கேதீச்சரமே 152

சூரனை வென்றரு ளாறு முகக்குகன்
சோதி மலைகதிர் காமமலை
பாரி லரகர வோசை மலிந்திடும்
பாவப் பிறப்பை யறுக்குமலை. 153

வேறு

அதிரவரு மாணிக்க கங்கைதனில் மூழ்கி
யன்பொடுசி வாயவென வருணீறு பூசி
முதிருமன் பால்நெஞ்ச முருகவிழி யருவி
முத்துதிர மெய்ப்புளக மூரவுரை குளறப்
புதியசெந் தமிழ்மாலை புகழ்மாலை சூடிப்
பொருவில்கந் தாசுகந் தாவென்று பாடிக்
கதிரைமலை காணாத கண்ணென்ன கண்ணே
கர்ப்பூர வொளிகாணாக் கண்ணென்ன கண்ணே. 154

வேறு

விதிவரைந் திடுபழைய வினையோடி மாயு
மிடிகொடும் பிணிசோக விதமான தேயு
மதியொடங் காரகன் முதலான கோளு
மருவிடும் பகையோடு மாறுன நாளும்
அதிகசுகந் தருஞான வழியான கூறும்
அளவிலன் பூனுமல மணுகாம லோடுங்
கதிரையென் றோதுமலை கண்டகண் கண்ணே
கர்ப்பூர மெய்ச்சோதி கண்டகண் கண்ணே. 155

வேறு

கடல்புடைசூழ் மணியிலங்கைக் கயவாகு வயவேந்தன்
கண்டுவந்து கண்ணகிக்குக் கோயிலெடுப் பித்தபின்னர்
இடமிடந்தோ றவள்கோயி லெங்கெங்கு நிறைந்தனவே
எழிலாருங் கழையோடை யிரும்பதியு மொன்றுமே 156.

வேறு

இனமினமா யெவ்வெவ்வரு மீண்டிவழி பாடுசெய
வனமதனிற் கதலிகர்க்கு மடுக்கோயில் மருவிடுமே. 157

வேறு

போற்று கின்ற சைவ சமயம்—வரும்
புத்தசமயம் மக[?] தத்தசமயஞ்
சாற்று கின்ற முச்சமயமும்—உரிமை
தங்க விளங்குஞ் சரண பங்கயமலே. 158

பாதிமதி யணிந்திடும்—சிவன்
பாதமலர் என்றுபணிந் தோதுவர் சைவர்
தீதிலாப் புத்தபெருமான்—அருட்
சேவடிகள் தங்குமென்று புத்தர்பணிவார். 159

ஓதுமக மதியரும்—தங்கள்
உரிமைசொல்லிக் கும்பிடுவார் நம்பிமனமே
யாதினும் யாதாகியே—முதல்
இறைவனைப்போல் நிற்குமந்தச் சரணபங்கயம். 160

வெந்நீர்க் கேணிகள்

காதலனைப் பிரிந்தவளின் மனம்போல வொன்று
கவிபாடிப் பரிசுபெறுன் மனம்போல வொன்று
தீதுபழி கேட்டவன்தன் மனம்போல வொன்று
செய்தபிழைக் கழுங்குமவன் மனம்போல வொன்று
நீதிபெறு வேழைதுயர் மனம்போல வொன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம்போல வொன்று
காதுமழுக் காறுடையான் மனம்போல வொன்று
கனலேறு மெழுநீர்க ளுண்டுகன்னி யாயில். 161

வற்றுக்கேணிகள்

வேறு

வஞ்சகமார் பரத்தையரின் மனம்போல நிலைகாணு
வற்றாத நவக்கிரி வாவிகொண்ட நாடு
கஞ்சமலர் விரிகின்ற யமுனைநதி யேரி
காகுத்தன் வில்லூன்றி கவினுமெங்கள் நாடு. 162

## வெள்ளரசு

பண்ணோங்கு தத்தைமொழிப் பசுங்குழலாள் மித்தை
பாரோங்கப் புத்தபிரான் பதமலர்க ளோங்கும்
விண்ணோங்கு மனுராத புரத்தினிலே வைத்த
வெள்ளரச மரமோங்கு நாடெங்கள் நாடே. 163

## கைத்தொழில்

விளையும் பருத்தி வெண்ணூலாற்—பல
வேடைகள் கொண்டிடு மாடைகள் நெய்வார்
நுழையுஞ் சருகை நுண்வேலை—பெரு
நூதன மாகிய சாயங்கள் செய்வார். 164

நான்முகன் பத்திர மென்று—பலர்
நாட்டும் புகையிலை நாட்டிலே கொண்டு
மேன்முக விலைபுறங் கூட்டிப்—பல
விதமான சுருட்டுகள் செய்வாரிந் நாட்டில். 165

கல்லாத கயவருக் கொப்பாய்ப்—புதர்க்
காட்டிலே வளர்கின்ற ஈந்தி னிலைப்பாய்
அல்லாது பலவிதப் புற்பாய்—பின்னி
அளிப்பாரே வேண்டிய வளவான பொற்பாய். 166

கொட்டுப் பெட்டிவகை யோடு—நல்ல
கூடை பறிகள் குறுஞ்சீனிப் பாய்கள்
கட்டுப்பெட்டி சாயப்பெட்டி—மிகு
கற்பனை யாகவே பற்பல செய்வார். 176

பூலோக கற்பக மென்று—தமிழ்ப்
புலவர்கள் பலபடி புகழ்ந்திட நின்ற
மேலான பனையோலை கொண்டு—செய்யும்
வேலைகள் முடியுமோ வுரைக்கவாய் விண்டு. 168

படுக்கும் பாயுலர்த்தும் பாய் கதிர்ப்பாய் — நெல்லுப்
பத்தாயக் கூடைகள் குட்டித் தடுக்கே
எடுக்கும் வாய்ப்பெட்டி கடகம் — நீரை
இறைக்கு மிடாக்க ளியைந்த பிழாக்கள். 169

கொழிக்கின்ற சுளகொடு தட்டு — பூங்
கூடைகள் மாவரிப் பெட்டிகள் மட்டு
இழைக்கின்ற வீர்வாணி வட்டு — கலம்
ஏறியசைய முறிபல பட்டு 170

வெட்டிய பன்மரங் கொண்டு — செயும்
வேலைகளோ விற்குப் பலபல வுண்டு
கட்டி லரியணை பீடம் — நல்ல
கதவுகள் சாளரங் கடலோடு மோடம் 171

செம்பொனில் வெண்பொ னிழைகள் — ஒளி
செய்கின்ற சங்கிலி செங்கை வளைகள்
பைம்பொற் சிலம்பொடு தாலி — இன்னும்
பழையன புதியன புரிவரே கோலி 172

விரும்பினர் குடியைக் கெடுக்கும் — கொடு
வெறியுள்ள சாராயம் பனங்கட்டி சீனி
பெரும்புரி சிறுபுரிக் கயிறு — வேறு
பின்னல் வகைகளு மன்னிடச் செய்வர் 173

வேறு

அறுசுவைக்கு முயிரான வுப்புவிளை விப்பார்
அழுக்காமை யோட்டிலே சீப்புவரு விப்பார்
மறுபுலத்தி னெந்திரத்துஞ் செக்கினிலு மாட்டி
வாய்ப்பான வெண்ணெய்வகை வடித்தெடுப்ப ராட்டி

கடையாது நெருப்புதவுந் தீப்பெட்டி செய்வார்
கல்லரிந்து சுட்டிடுவர் காற்செருப்புச் செய்வார்
வடிவான மட்பாண்ட வகைபலவும் வனைவார்
மாவிலங்கை நகர்வயிறு வாய்த்தவரிற் சிலரே 175

என்னதொழில் செய்தாலு மெப்பாடு படினும்
எங்கள்கலி யிரவுமிடி யிரவும்விடி யாவே
அந்நியர் களாளுகையு மவர்பொருளும் போகு
மவ்வளவு மெங்கள்துய ரவ்வளவிவ் வளவோ 176

## ஏற்றுமதி யிறக்குமதிப் பண்டங்கள்

ஏலேலோ ஏலவல்லி — தத்தெய்யா
ஏலேலோ ஏலவல்லி.

சுந்தரஞ்சேர் கொழும்புநகர்த்
துறை முதலாந் துறைகளிலே
வந்திறங்குஞ் சரக்குவகை
வகுத்தெடுத்துத் தொகுத்துரைப்பேன்
ஆருயிர்க் கமுதாகு மரிசிவகை நெல்லு
அமுதுக்குக் கறியாகும் சரக்குவகை சீனி
சீர்பெருகு தேனுவரு ளுந்திரட் சிப்பால்
செய்யுநவ நீதவகை காயமொடு முட்டை
ஊர்விளையு முருளைக் கிழங்குதக ரப்பால்
உப்பிட்ட மீன்பனிக் கட்டியிடு மீன்கள்
வேறுபல தீவில்வரு நாறுபல மீனு
மென்சிறார் உண்கின்ற மதுரவகை யோடு 177

கோதுமையின் வெண்மாவுங்
கூறுவிசுக் கோத்துகளுந்
தீதில் பல வெள்ளாடுஞ்
செம்மறிவான் கோழிகளுஞ்
சுட்டிடுமு ரொட்டியொடு தொட்டுமிசை கின்ற
தூமதுர மேவிரச பாகுவகை யோடு
கட்டிய சுருட்டுவகை வெட்டிய விறைச்சி
காணவா பூறிடுங் கனிவகைகள் மேலும்
உட்டெளி வழித்திடு மதுவகை பிராந்தி
உவப்பாக வுண்கின்ற காப்பிநீர்க் கொட்டை
இட்டமுள மட்கலங் கண்ணாடி கத்தி
இருப்பாயு தங்களொ டுருக்குவகைப் பண்டம். 178

நாழிகையின் கணக்குரைக்கு
நல்லமணிக். கூட்டுவகை
கேழ்கிளர்மின் சாரவகை
கிளர்ந்தபுகைப் படவகைகள்
ஏர்கொண்ட எரிவாயு. மாமணி விளக்கம்
இருசக்க ரப்பிடிகை தூமவிர தங்கள்
பேர்கொண்ட எமனென்னு நிலவூர்தி வகைகள்
பேசியது பின்சொல்லு மிசைக்கருவிப்பெட்டி
பார்கொண்ட வுருவப் புகைப்படக் கருவி
படிக்கின்ற புத்தகம் காகித மைக்கோல்
நீர்கொண் டிறைக்கின்ற சூத்திரக் குழல்கள்
நிலையான அச்சியந் திரசாலை துன்னம். 179

போலிவெள்ளி தனிற்சமைத்த
புதியபல பாண்டவகை
சீலமிகு பட்டுவகை
சிறுவர்விளை யாடுபொருள்
பொறைநில மகழ்ந்தெடுத் திடுமெண்ணெய் வகைகள்
பூம்பஞ்சில் நெய்திட்ட ஆடைவகை பலவும்
உறைகின்ற குளிர்தாங்கு கம்பலப் போர்வை
உயர்வீடு வேய்கின்ற வோடுவகை சாந்து
நறைதங்கு வாசனை சுண்ணமுட னெண்ணெய்
நாரிமார் விழைகின்ற சவர்க்காரக் கட்டி
அறைகின்ற நறுமணப் பூச்சுமா வடிகட்
கணிகின்ற தொடுதோல்கள்தொப்பிகுடைபந்து. 180

சொன்னவகை களும்பிறவு—மூன்று
துறைகளிலுங் கொண்டுவந்து
வன்னமணிக் கப்பல்தர
வளஞ்சிறக்கு மிலங்கைநகர்
எங்கெங் கிருந்திங் கிறங்குவது கேண்மின்
இமயமால் வரைகொண்ட இந்தியா தேசம்
பொங்குங் கடாரஞ் சயஞ்சீன தேசம்
பொற்றேரி லிரவிமுற் காண்கின்ற யப்பான்

அங்கிலர் வசிக்கும் பிரித்தானிய தேசம்
அமெரிக்கர் வாழ்கின்ற பாதாள பூமி
சங்கையுறு சருமனியொ டிற்றலி பிராஞ்சு
சாருந் துவீபங்கள் தந்த பொருளிவையே. 181

இங்கிருந்து பிறநாட்டுக்
கேற்றுமதி யாயெடுக்கு
மங்கலஞ்சேர் பொருள்வகைகள்
வகுத்துரைக்கக் கேட்டீமோ
விரிதலைத் தெங்கின்வரு முடிகொண்ட தேங்காய்
வேறான சொட்டுடன் காய்ந்திட்ட துருவல்
எரிகின்ற எண்ணெயொடு லர்ந்தபிண் ணாக்கும்
ஏலரிசி கறுவா மரப்பட்டை பாக்கு
கரியொன்று காரீயந் தேயிலை புலெண்ணெய்
காய்ச்சிய மரப்பயன் கொக்குமாக் கொட்டை
சொரிகின்ற சோதிவிடு மாணிக்க வகைகள்
தூரதே சங்களுக் கேற்றுமதி யாமே. 182

## பொது

சீரான வோவியமோ சிற்பமோ வேறுசெய் வினையோ
கம்மியமோ சித்திர வேலைகளோ
சேராத கைத்தொழில்கள் வல்லவரா யிருந்தார்
தொல்லிலங்கை நகருறைந்த பழையகுடி மாந்தர்
ஓராயிர வருட முன்னை செய்தி
யுருவழிந்து கிடக்கின்ற கட்டிடங்கள் சாட்சி
வாராதோ வெமக்கது போலின்று மொருகாலம்
வருகால மெம்முடைய வறுமைதொலை காலம். 183

பொய்யுரையா மாந்தர்பல ரந்நாளில் வாழ்ந்தார்
போற்றுபல புலவர்களு மந்நாளில் வாழ்ந்தார்
கையினிலே மழுவெடுத்த கற்புடையார் வாழ்ந்தார்
கடித்தவிடந் துண்டெழுதிக் கடத்துபவர் வாழ்ந்தார்
மெய்வலியா லெள்ளினெய் பிழிந்தவரும் வாழ்ந்தார்
மேலான செல்வர்களும் யோகியரும் வாழ்ந்தார்
ஐயையோ வக்கால மெக்கால மதுபோல்
ஆங்கால மக்கால நாம்சுகிக்குங் காலம். 184

உ

திருச்சிற்றம்பலம்

# தால விலாசம்

## காப்பு

மன்னுநீர் ஞாலத்து வான்பனையின் மேன்மையெலாம்
பன்னுகலி வெண்பாவாற் பாடவே — முன்னர்வரு
போதகனே விக்கினங்கள் போக்குகின்ற பூதகண
நாதனே முன்னே நட

## நூல்

ஓங்கார மூலத் தொருவனிரு தாடொழுது
பாங்கார் தமிழ்க்கலிவெண் பாட்டினால் — வீங்குபுகழ்த்
தால விலாசந் தனையுரைப்பேன் தெண்டிரைசூழ்
ஞால முணர்க நயந்து

### பனை பூமியில் உண்டான வரலாறு.

சீர்பூத்த செங்கமலத் தேவியே தேசுமலி
வார்பூத்த கொங்கை மடமயிலே — பார்பூத்த
கற்பகமே யன்ன கடவுட் பனையருளு
நற்பயன்கள் நான்கிரட்டி நூற்றொன்று — மற்றவற்றை
வேறுவே றாகப் பிரித்து விரித்தெடுத்துக்
கூறமுடி யாது குவலயத்தில் — நாறுமலர்ப்
பூவா முயன்படைத்த போகப் பொருள்களுள்ளே
ஓவாப் பசியை யொழிப்பதற்கு — மேவுமனைத்
தட்டுமுட்டுக் கூட்டுதற்குந் தாவுபிணி யோட்டுதற்கு
முட்டெளிவி லார்க்குமுண வூட்டுதற்கு — முட்டாது
தந்துதவ வல்ல தனிப்பொருளொன் றின்மையினால்
இந்த வுலகத் தவரிரங்கிக் — கந்தமலர்
முட்டாண் முளரி முழுநீலப் பாசடைமே
லொட்டாப் புனல்போ லுளமறுகி — யெட்டாகி

யொன்று மிரண்டா யுலகா யுடனுகி
யன்றுகி நின்ற வரனடிகள் — நன்றுகப்
பூசைமுடித் தெம்மையாள் புண்ணியனே யெங்களுள்ளத்
தாசை முடிய வருளென்றே — நேசமுடன்
வேண்டி வரங்கிடப்ப வேண்டியவெல் லாமீயு
மாண்டகையு முள்ளத் தருள்சுரந்து — நீண்டபுவி
காக்குந் திருமாலே யுள்ளக் கசப்புடனே
நோக்கிநீ யிவ்வுயிர்கள் நோவாது — காக்கும்
வினையிற் றவறும் விதமென்கொ லென்னப்
புனைமலர்க் கைகட்டி வாய்பொத்தி — வினயமுடன்
என்றன் றெழிலி லிறையுங் குறையில்லை
மன்றன் மலரோன் வகுத்தவற்று—ளொன்றுகி
மாந்தர் மனக்குறையை மாற்றும் பொருளில்லை
யேந்தலே யென்றுநெடு மாலிசைக்கக் — கூர்ந்தயனைக்
கண்சிவந்து நோக்கியென்ன காரியஞ்செய் தாயென்று
பெண்சுமந்த மேனிப் பிரான்வினவ — வெண்சுமந்த
நாற்றலையா னுற்ற நடுநடுங்கி நாக்குளறி
வேர்த்துப் பணிந்து விளம்புவான் — ஏற்றுகைக்கும்
அண்டர் பிரானே யடியே னறிந்தவற்றை
யுண்டுபண்ணி வைத்தே னுலகிலென — வண்டங்
கருவுயிர்க்கு மங்கயற் கண்ணிசின மாற்றி
இருவரிலுங் குற்றமில்லை யென்னக் — கருணைமிகு
மெம்பெருமா னுறி யிருந்து பிரமனைக்கூஉய்
அப்புவியின் மாந்த ரனைரகல — வும்பருறுங்
கற்பகத்தை யிப்பொழுதே யாக்கக் கடவையெனப்
பொற்பதுமத் தானு முளம்புரிந்தே — யற்புதஞ்சேர்
புற்பதி தாலம் புகழ்பெண்ணை பொந்தியெனப்
பற்பல கூறும் பனைமரத்தை — யிப்புவியி
லான்ற பனையூ ரழகார் பனங்காட்டூர்
ஏன்ற பனந்தரையூ ரென்றுரைக்கு — மூன்றுபெருந்

தேயங் களிற்படைத்தான் தெய்வப் பனையுலகுக்
கீயும் பொருளு மிசைபயனு — மாயிழையே
யானறிந்த வண்ண மெடுத்துத் தொடுத்தியம்பத்
தானமர்ந்து கேட்டுட் டரித்திடுவாய் — மாநிலத்திற்

**பனை உண்டாக்கும் வகை.**

கொத்திவெட்டி வேலிகட்டிக் கொட்டைபெழு சாணென்றுப்
பத்திபத்தி யாகப் பதித்திடுகில் — வைத்தவிதை
பாவாய் முளைகிளம்பிப் பாம்பா டிடும்பருவத்
தாவா டெருமைதின்று தேவளர்த்தா — லோவிலருள்
முப்பாசந் தீர்த்த முனிவர்மொழி வாய்மைபோ
லெப்போது நின்றுபய னீயுமே — தப்பா
வலியொன்றி யோங்கி வடலியாய்ப் பொல்லாக்
கலிகொன்று காமர் குடைக்கீழ்ப் — பொலியும்
உருக்குவாள் வேந்தன்போ லோரிருசாற் கூருங்
கருக்குவாள் கொண்டுலகைக் காக்கு — நெருக்கிருவில்
தங்குமட்டாய் நீண்டு சருகா யதிற்செறிந்த

**கங்குமட்டை.**

கங்குமட்டை தானே கழன்றுதிரு — மங்கொருவர்க்
கீயான் கரம்போ லிறுகு மிளவடலி
காயாத கங்குமட்டைத் தும்பினால் — மேய
துடைப்ப முதலாகச் சொல்லுபொருள் செய்வர்
அடுப்பெரிக்கக் காய்ந்தமட்டை யாகு — மடுத்துவரும்
பன்னாடை தீயெளிதாய்ப் பற்றுபொரு ளாங்கள்ளுத்
தன்னை வடித்திடவுந் தானுதவு — மன்னுலகிற்
பெண்பிளையுந் தண்பனையும் பேணிவளர்த் தால்வருடம்
பண்பிலொரு பத்திற் பயன்கொடுக்கும் — தண்பனைகள்

### பாளை.

கார்த்திகை மார்கழியிற் காகதுண்டம் போற்பாளை
சேர்த்தொதுக்கி வைத்த திரவியம்போல் — வாய்த்த
மகரமதி மாசி மதியில் வெளியாய்

### குரும்பை

பகரு மிளங்குரும்பை பற்றும் — புகுதிவினை
பம்பு மவமிருத்தாற் பைங்குழவி சாவதுபோல்
வெம்பு குரும்பைசில வீழுமெடுத் — தம்புவியி
லாவின் பசிதீர வன்பா யரிந்துவைத்தாற்
பாவம்போ மாவினமும் பால்சுரக்கு — மேவுங்

### நுங்கு

குரும்பையது முற்றிக் குடிக்குநுங் காங்கால்
விரும்பிவெட்டி மேன்முகிழை நீக்கி — யரிந்துகட்டை
சுட்டு விரல்களினாற் றோண்டி யுறிஞ்சியுண்ணக்
கட்டிகனி பாகுசுவை காணுவா — மிட்டமுட
னுங்கமுதங் கண்டா லுடனொந்து வானவர்கள்
அங்கமுத முங்கடைய மாட்டார்கள் — நுங்குணவு
வேர்க்குருவைத் தாகத்தை மேவும் பசியதனைத்
தீர்க்குமே சீதக் கழிச்சலையும் — ஏற்கும்

### பனுவில்.

பனுவிலென்று நாட்டில் வழங்கும் பனங்காய்
அணியு முடைத்தமுகி ழாங்கே — பணிவாகக்
கஞ்சியுங் கூழுங் கரைத்த பழஞ்சோறுங்
கொஞ்சியுண்ணும் பாத்திரமாய்க் கூடுமே — யெஞ்சாக்
குறியெதிர்ப்பை யுப்பளந்து கொள்வருடை யாத
திருகுமுகிழ் தீயெரிக்கச் சேரு — மருவுகாய்

### சார்வாய்.

நீங்கிப் பழுக்கு நிலையிற் சிலபழத்தை
வாங்கி வெயின்முகத்து வாடவைத்துப் — பாங்காகக்
கோலுந் தசையரிந்து கூறுபழந் தேங்காயின்
பாலும் பருப்புங் கலந்தவித்துச் — சாலவே
நீர்வா யொழுக நினைவாகத் தேடியுண்ணுஞ்
சார்வா யுணவென்று தானுண்பர் — சீராகக்

### பழம்.

காய்முற்றி நன்றாய்க் கனிந்து பரிமளித்து
வேய்முற்று தோளி விழுமெடுத்துத் — தீமுற்றுஞ்
செந்தழலி லப்பழத்தைத் திட்டமுடன் சுட்டெடுத்துச்
சந்தநீ ரிற்கழுவித் தோல்தள்ளி — வந்திருந்து
கையாற் பிசைந்து கறந்துகுடிப் பாரதற்குச்
செய்தேன் திரட்சிப்பால் சீனியொவ்வா — செய்துவைத்த
காடிபுளி நீர்தெளித்துக் காதலுட னுண்பதுவு
நாடி யுரைப்பர் நலமென்றே — தேடிக்

### பணிகாரம்.

கறந்தெடுத்த நல்லபனங் காய்க்களியைக் காய்ச்சிச்
சிறந்தமா சீனியுடன் சேர்த்து — நிறந்திகழும்
எண்ணெயில் நெய்யி லியைந்ததொன் றிலேயிட்டுப்
பண்ணிகாரஞ் சுட்டுப் பாத்துண்பார் — திண்ணமாய்
அல்லற் பசிக்கு மரும்பிணிக்கு மாரமுதாஞ்

### பனாட்டு.

செல்வப் பனாட்டின் திறமுரைப்பேன் — மெல்லியலே
சுத்தத் தலத்திற் றொடையுயரப் பந்தரிட்டு
மெத்தச் சுசியாய் மெழுகியே — யத்திமுகத்
தைங்கரனைப் பூசனைசெய் தையா பனைப்படைப்பை
யிங்கிதமாய்க் காப்பா யெனத்தொழுது — பங்கமின்றி

வெட்டிப் பழுத்தகனி வீழ்கனிக ளைக்கழுவித்
தட்டி நெகிழ்த்துரித்துத் தானடுக்கி — வட்டக்
கடகங் களிலிட்டுக் காடிவடித் தூற்றித்
திடமாகச் சேர்த்துப் பிசைந்து — கொடுமிடிமை
துன்று நலத்தைத் துருவி யுறப்பதுபோல்
ஒன்று களியை யுறங்கெடுத்து — நன்றாகப்
பின்னுமொரு கால்வேறு பெட்டியிலிட் டுப்பிசைந்து
மன்னுங் களிபிழிந்து வார்த்தொன்றாய்ச் — சொன்னபடி
இஞ்ஞாச் செடியின் கிளைக்கூட்டி றூற்றுழவி
யெஞ்சாது குச்சை யெடுத்தெறிந்து — செஞ்செவே
முன்னஞ்செய் பந்தர் முழமா றிரண்டுடைய
பன்னஞ்செய் பாய்மேற் பரவியே — நன்னயமாய்
மாலை மடித்து வழிகாட் சுடர்தோன்றுங்
காலை விரித்துக் களிபரவி — மேலைவித
மெட்டு நாளெட்டுக் களிவிட் டிறுகியிறை
மட்டதா கத்தடித்து வந்ததற்பின் — னிட்டமுடன்

கூடையில் அடைத்தல்.

உப்புப் பிரண்டையிரண் டொக்கவதன் மேற்றூவித்
தப்பாமற் சாணுக்குச் சாண்கீறிச் — செப்பமிலாப்
புல்லர்பா லிச்சகம் பேசிப் பொருள்பெறல்போல்
மெல்லமெல்லப் பாயிதழை வெட்டாமல் — நல்லகூர்த்
தட்டகப்பை யாற்புல்லுச் சத்தகத்தாற் றண்ணீரிற்
றொட்டெடுத்துச் சூரிய வெப்பத்தில் — வட்டக்
குடிவின்மேற் காயவைத்துக கொண்டவிதழ் போக்கி
வடிவாக நூல்போல் மடித்து — மிடிபோகப்
பின்னாக வுண்பதற்குப் பெய்துபொத்திக் கூடைதனிற்
பொன்னாக வேபரணிற் போற்றிவைப்பார் — மின்னுசுடர்

பாணிப்பனாட்டு. — 1

மாணிழையாய் செல்வர் மனமாக வுண்கின்ற
பாணிப் பனாட்டின் பரிசுரைப்பேன் — பேணுபனங்.

கட்டியு நெய்யுங் கலந்துகளி பாதியிறை
மட்டுந் தடித்திறுக வார்த்ததற்பின் — கெட்டியாய்
முன்போ லெடுத்து யடித்துமுடை கூடையிலிட்
டன்பாக வுண்ப ரதுநிற்கப் — பின்புமொரு

பாணிப்பனுட்டு. — 2

பாக முரைத்திடுவேன் பக்குவமாய்க் கேள்சிறுதுண்
டாகப் பனுட்டை யரிந்துகொண்டு — வேகவறுத்
திட்டிடித்த வெள்ளு மிளகரிசி சீரகமும்
அட்டெடுத்த பாணி யுடனளவி — முட்டியிலே
பெய்துவைத்துப் பின்பு பெருவிருந்தா யுண்பார்கள்

தோற் பனுட்டு.

செய்தோற் பனுட்டின் திறமுரைப்பே — னெய்தும்
அமளிபோய் மாறி யருந்தலாய் வீழுங்
கமழுங் கனியின் களியை — யமைவுபெற
மூன்றிரண்டு நாள்வார்த்து முற்றாகக் காய்ந்ததற்பின்
ஏன்றதாள் போல வுரித்தெடுத்துத் — தோன்றுஞ்
சுருளாக்கிப் பச்சடியுந் தொட்டுண்பர் மேலும்

படைப்பு.

அருளாரு மைங்கரனை யுன்னி — மருவொடியல்
மாப்பிட்டு வாழை வருக்கைதே மாங்கனிகள்
வாய்ப்புற்ற புத்தமுதும் வைத்தேத்திக் — காப்பிட்டால்
வைத்த பனுட்டின் மருவு முழுப்புமுதல்
எத்தனையு மூன மியையாவாம் — வைத்தெடுத்து

பனுட்டின் நன்மைகள்.

மாரிகா லத்தின் மருவுமுண வோடுண்ண
வீரியமாய் நோய்கள் விலகுவகேள் — சேரு
மலச்சிக்கல் போக்கு வயிற்றளைவு மீன்முட்
குடர்ச்சிக்கல் கூட்டோடு போக்கு — நிலத்திலே

### பாத்தி போடுதல்.

தின்ற பனங்கொட்டை சேர்த்துப் பிசைந்தகொட்டை
ஒன்று கருக்குப் பொறுக்குக் கொட்டை—யென்றென்று
கொத்தாக நாலான கூறாகக் கூறுகின்ற
வித்தை யெடுத்துவெவ். வேறாகப் ?— பத்தியாய்
நாலைந்தா'றெட்டடுக்கு நன்றாக வேயடுக்கி
மேலேமண் ணிட்டருகு மேவியே — சால
வெயிலெறிக்கு மாவணிக்கு மேவுபுரட்டாதி
யிருமதிக்கு நீரிறைத்து விட்டாற் — பருவத்திற்
கையில் விரல்போலும் காளான் முளைபோலும்
பையக்கீழ் நோக்கிப் பயிராக்குந் — தைமாசி

### கிழங்கு.

மாதங் களிற்கிழங்காம் மப்புமழை யில்லாத
தீதற்ற நல்ல திருநாளி — லோதும்
அருகக் கடவு ளடியார் தலைபோல்
மருவு மயிர்முழுது மற்ற — கருவூமல்
தன்னை வடுகன் சதுர்முகனைச் செய்ததுபோல்
முன்னம் பறித்து முடித்ததற்பின் — அன்னமே
கிண்டி யெடுத்துக் கிழங்கின்மேற் றோலுரித்துக்
கொண்டுதலை சீவிக் குறிப்பாக — நன்றவற்றைப்
பப்பாதி யாய்க்கிழித்துப் பற்றுநுனி வாலொடித்துத்
தப்பாது வெய்யிலிலே தான்பரவி — யப்பாலும்
வான்முறித்து வார்ந்து மறுவின்றி நன்றாகப்
பானிறத்துக் காய்ச்சிப் பதமாக்கித் — தானத்
துமலிலிட்டுப் பொத்தி யொடியலென வைப்ப
ரெமதுசன மிஃதென்றே யெண்ணி — நவைதீ

### பிட்டு. — 1

ரொடியறனிற் செய்யு முணவுவகை கேளாய்
தடியனுக்கு மென்பருங்கிற் றோகா — யொடியறனை

வல்லுரலி லிட்டிடித்து மாவாக்கி மற்றதனைத்
தெள்ளிநீர் விட்டுத் தெளித்தூற்றி — மெல்லவே
சீலையி லிட்டுத் திருகிப் பிழிந்துதறி
வாலிய வுப்புநீர் வார்த்தளவி — மேலுங்கேள்
வாய்ப்பான கீரைசுவை மாறன் கொடிப்பொடியுஞ்
சேர்ப்பார்கள் சேர்த்துத் திரட்டியே — பூப்பரவு
மன்னர் முடிபோல் வனைந்தநீற் றுப்பெட்டி
தன்னிலிட்டு வேகவைத்துத் தானுண்ப — ரன்னதுதான்
ஈட்டுபொரு ளில்லாத வேழைகட்கு நல்லுணவாம்
வாட்டு பசிநீக்கும் வன்மைதரு — மீட்டுமொன்று

பிட்டு. — 2

பன்னுமா தேங்காயின் பாலுப்பு நீலகிற
மன்னுமால் பத்து வடிவிலொன் றுஞ் — சொன்னபடி
சேர்த்துமுன் போலவித்துத் தின்னலாம் யாவருக்கும்
நேர்த்தி யுணவு நிறைவலியாம் — நேர்த்தியாய்

பிட்டு — 3

வார்த்த நடுவொடியல் மன்னுசலத் தூறவைத்துக்
காய்ந்த பிறகு கடுகவிடித் — தாய்ந்தரித்துத்
தெள்ளி யெடுத்த திகழ்டியுந் தேங்காயிற்
கொள்ளு நறிய கொழும்பாலுந் — தள்ளரிய
உப்புநீர் கீரை யுரைத்தபழ மும்பிறவுந்
தப்பாமற் சேர்த்தவித்துத் தானிறக்கி — யெப்பொழுதும்
ஆவினறு நெய்யு மளவி யருந்திடலாம்
நாவி னுருசிமிக நன்றாகும் — ஆவலுடன்

பிட்டு. — 4

செப்புவேன் வேறுமொன்று தேங்காய்த் துருவல்விளை
குப்பரிசி மாவிளகாய் சீரகமுந் — தப்பாமற்
கூட்டி யவித்தபிட்டுக் கூறுபல நாட்செலினும்
வாட்டமின்றி வைத்து வழங்கலாம் — நாட்டுநறு
நெய்யைத் தயிரை நிறைபாலைச் சேர்த்துண்ணில்
மெய்யிளைப்பு நீங்கும் விறலுமுண்டாம் — வைத்து
வாழு மவரொடியல் மாவினற் செய்கின்ற

கூழ் — 1

கூழின் வகைகள்சில கூறுவேன் — நீளிலையில்
நீர்வார்த்து நெல்லரிசி நொய்புலவு மிட்டவித்துக்
கூறும் புளிமிளகாய் கூட்டியே — யோரளவாய்
மாவைக் கரைத்ததனில் வார்த்தகப்பை யாற்றுளவி
மேவும் பதங்கண்டு விட்டிறக்கி — யாவலுடன்
உண்ணவுண் ணத்தெவிட்டா துண்ணலாம் வேண்டுமேல்
வண்ணப் பழங்களொடு மாந்தலாம் — இன்னுமொன்று

கூழ். — 2

செந்நெல் லரிசி சிறுபுலவு காரையிலை
பன்னு பலாக்காய்ப் பருஉச்சுளைகள் — இன்னும்
வறுத்த பயறுழுந்து கீரைவகை யிட்டுக்
குறித்த புளிமிளகாய் கூட்டிப் — பொருத்தமா
யுப்பிட்டு மாவைக் கரைத்தூற்றி முன்போலச்
செப்பு சுவைபாகந் தெரிந்திறக்கி — யெப்பொழுதும்
ஓதும் பனங்காய் முகிழிற் பலாவிலையில்
ஆதரவாய்ச் சூடாற வூதியே — பூதலத்தில்
ஏவரு முண்ண விளகு மலம் பசிக்கும்
மேவும் பலகிருமி வீடுமே — பூவையே

சுட்ட கிழங்கு.

கிண்டியெடுத்த கிழங்கிற் சிலவற்றை
மண்டு நெருப்பிலிட்டு வாட்டியே—நன்றாக
இட்டமிள குப்புள்ளி யேற்றமிள காயரைத்துத்
தொட்டுத் தொட்டுண்ணச் சுவைகூறும் — மற்றதனை
மாலையிற் சுட்டு மனைக்கூரை மேலிட்டுக்
காலையெடுத் துண்ணக் கடுப்பகலுங் — கோலமலர்ப்

புழுக்கொடியல் — 1

பூங்குழலாய் கேளாய் கிழங்குபுழுக் கிக்கிழித்துப்
பாங்காகக் காயவிட்டுப் பக்குவமா—யாங்கதனைத்
தேங்காயின் சொட்டுடனே சேர்த்துக் கடித்துண்பர்

புழுக்கொடியல் — 2

ஓங்கிய பல்லுள்ளோ ருறுகிழவர்—தேங்காய்த்
துருவலுடன் சர்க்கரையுங் கூட்டியிடித் துண்பர்

மருவுபல காரமும் வைத்துண்பர்—பிரியமாய்
வித்து முளைத்து வெளிவரும்போ தம்முளையைத்

### முளைக்கறி

துய்க்கலாம் மற்றதனைத் தூய்தாக்கி—வைக்குங்
கறியாய்க் குழம்பாகக் காய்ச்சியுண்ண வின்பம்
செறியுமதற் கில்லையொப்புச் செப்ப—மறுவின்றிச்

### பூரான்

சீராய் முளைத்தபனங் கொட்டைதனைச் சுட்டுவெட்டிப்
பூரானை யுண்பரது புத்தமுதாம்—ஆரெரியில்
வேகவையா துண்ணலாம் வேண்டுநறும் பிட்டுக்கும்

### ஊமல்

ஆகு முலர்ந்தகொட்டை யூமலாம்—பாகமாய்ப்
புல்லு நெருப்பிட்டுப் புறமகற்றிப் பொன்னிருப்புக்
கொல்லருக்குத் தாராக் குணக்கரியாம்—செல்வருக்கு
மூக்கிடுதூள் வைக்க மொழியு மருத்துவர்கட்
காக்குங் குளிகை யடைத்து வைக்கத்—தாக்கியே
பஞ்சுவைத்துச் சக்கிமுக்கி யால்நெருப்புப் பண்ணுதற்கு
மஞ்சிகையு மாகு மதுரமொழி—வஞ்சியே

### கள்ளு

ஏழைகட்குஞ் செல்வருக்கு மேற்ற பனைமரத்திற்
பாளைவருங் காற்பருவம் பார்த்ததனைத்—தாழா
திடுக்குத் தடிகொண் டிடுக்கிப் பிடியால்
அடித்து நுனியை யரிந்து — மடக்கியே
முட்டிவாய் வைத்து முடிந்துவிடின் மெல்லவே
மட்டுலாங் கள்ளூறி வந்திருக்கும் — இட்டமுடன்
வாமமதத் தாரதனை வாமிக்கு வைத்துண்டு
காமியம் வேண்டிக் களிப்பார்கள் — ஏமமிகு
கள்ளைக் குடித்துக் களியாடல் நல்லறிஞர்
எள்ளி விடுத்த விழிதொழிலாம் — உள்ளறிவைப்
போக்குங்கள் ளுண்ணிற் பொருந்து முடல் வலிமை
க்நீகுஞ் சிரங்குமுத னோய்பிணிகள் — ஆக்குகின்ற

### ஏரா.

ஏரா முறையை யியம்புகிறேன் நீயதனை
நேராகக் கேட்டிடுவாய் நேரிழையே — சேரும்
அரபொடியூ சிக்காந்த மாங்கிச்சுக் கிட்டம்
உரமுடனே முட்டியிலிட் டூற் — மருவுதினம்
ஏழுமுடன் . சென்று விறக்கியதி காலையுண்ண
ஈழைகா மாலையிவை யேகுங்காண் — பாளைதனிற்

### கருப்ப நீர்.

சுண்ணமிட்ட முட்டிகட்டித் தூக்கியெடுக் கும்பதனீர்
நண்ணுபசி தாக நலிக்குங்காண் — பெண்ணணங்கே
சோம்பல் திமிரகலுஞ் சூடடம்பை விட்டேகும்
ஆம்பலமுந் தண்ணென் றகங்குளிரும் — ஆம்பிரத்தின்
காய்சீவி யிட்டுக் கருப்பனீர் காசினியோர்
வாயுருசி யாகவே மாந்திடுவர் — தூய
பயறிட்டுக் காய்ச்சிப் பருகுதலு முண்டு
நயமாகு நன்மிளகிட் டுண்ணச் — செயிர்தீர்

### கற்கண்டு.

கருப்பநீ ரைச்சுண்டக் காய்ச்சிவேப் பெண்ணெய்
உருப்போது மோர்பதத்தி லூற்றல் — விருப்புடனே
ஓதுபுது முட்டியன்றி யோலைக்குட் டானிவற்றிற்
றீதகல விட்டு வைத்துச் செம்மியே — ஆதரவாய்ப்
பூவிற் புதைத்தெலினும் பொங்குபுகை யிட்டெனினுஞ்
சேமித்து வைக்கிற் றினவடையிற் — றாமலியுங்
கற்கண்டாம் மற்றிதனைக் கைக்கொண்டு வாய்க்கொண்டால்
மற்கொண்ட வீழைசளி மாறுங்காண் — விற்கொண்ட

### பனை வெல்லம்.

வாணுதலாய் கேட்டி மருவும் பனைவெல்லங்
காணும் வகையுங் கழறுவேன் — பாணிதனை
இன்னும் நெருப்பிட் டெரிக்கவிறு கிக்குமிழி
கொள்ளுமொட்டு மப்பதத்திற் கொண்டிறக்கிற் —
[சொல்லுகின்ற
வெல்லமா மேலு மெரித்து வியனகப்பை

### பனங்கட்டி.

புல்ல முறியுமப் போதிறக்கி— மெல்லவே
முட்டியி லோலை முடையுங்குட் டானிலிடக்
கட்டியா மோதுபனங் கட்டியாங் — திட்டமாய்

### துருப்ப நீர்ப் பொடி.

எள்ளு மிளகு மெழிற்சி ரகப்பொடியுங்
கொள்ளுமந்தப் பாணியுடன் கூட்டியே — மெள்ள
இறுகத் துழாவி யெரிக்க வெரிக்கச்
சிறுநுண் பொடியாகச் சேரும் — பெறுமதனை
உண்ணக் கொடுந்தாக மோடிவிடு மாண்பனையின்
பண்ணுமது வானற் பலநோய்போம் — உண்ண
இதந்தா யிலாக்குழவிக் கேற்றவுண வாகும்
பதந்தவறிற் கட்டி படுமாம் — மதந்தரும்
வஞ்சமதுப் பங்குனியாம் மாதத் தொடுதொலைய
அஞ்சுமா தங்கட் கதன்பழமா — மெஞ்சிய
திங்களுக்குச் செல்வப் பனைட்டாகுஞ் சீருணவு
மங்காப் பனையீயு மாண்டு முற்றுங் — தங்குபுகழ்ப்
பாரிபோல் யார்க்கும் பயனருளித் தன்னையுமே
நேருங் கொடையாக நின்றுதவுஞ் — சீரியநற்
கற்பக மன்ன கடவுட் பனையுணவை
அற்புடனே யெந்நாளு மாதரித்தால் — முப்பொழுதும்
உண்ணவொரு நாளுக் கொருபொழுதுண் டேநோற்கும்
அன்னவர்போல் நல்லபய னங்கடைவார் — மன்னுபனை

### பனை யோலை.

யோலைதனை யொன்றுவிட் டோர்வருடம் வெட்டிவெயில்
மேலுலர விட்டு மிதித்தடுக்கிச் — சாலவும்
வேலி யடைக்கலாம் வீடுகளும் வேயலாம்
கோலக் குடில்கட்டிக் கொள்ளலாம்—மேலுந்தான்
வாரி விளையா வயற்கெருவாய்ப் போட்டுவிட்டால்
வீரியமாய்ச் செந்நெல் விளையுங்காண்—சேருமட்டை

### நார்

கொள்ளுமிரு பாற்கருக்கும் சீவிக் குலவியநா
ருள்ளும் புறமு முரித்தெடுப்பா—ருண்ணூரால்

வேலிகட்ட வுங்கயிறு வெவ்வேறு பின்னவுங்கோ
பாலர்தயிர் முட்டியுறி பண்ணவுமா—மேலுங்கேள்
மட்டை விறகாம் வரிச்சாஞ் சுவடிக்கட்குக்
கட்டி யிறுக்குங் கடைகாப்பாந்—துட்டர்
எலிப்பிடிக்க வேற்று மிடாராகு செய்ய
வலிப்புடைய் பாவாற்றி யாகும்—ப்லிப்பான

பன்னவகை

வன்னக் குருத்தில் வடிவாகச் செய்கின்ற
பன்னவகை யின்னவெனப் பன்னரிதா—லன்னவை
புத்தகப் பெட்டி புகல்கட்டுப் பெட்டிபல
வித்தகப் பெட்டி மிகுகுட்டான்—வைத்த
கடகம் பத்தாயங் கதிர்ப்பாய் கிடைபாய்
திடமா முமலளவு சேர்கள்—கடவுட்டிரு
நீறிடுங் குட்டான்கள் நீரிறைக்கும் பட்டைவகை
கூறுபல வுஞ்செய்து கொள்ளலா—மாறங்க
வேதநூ லாகமநூல் வேறுமுள மெய்க்கலைகள்
போத மிகுந்த புராணநூ—லோதுகின்ற
மந்திரநூல் சிற்பநூல் வாகடநூல் வாய்மைமிகு
செந்தமிழ்நூல் பற்பலவுந் தீட்டலாஞ்—சுந்தரஞ்சேர்
மங்கல நாளோலை மங்கையர்க்குக் காதோலை
துங்கமிகு நண்பருக்குத் தூதோலை—தங்குபல
பற்று வரவு பதியுங் கணக்கோலை
மற்று முறுதி வரையோலை—கற்றவர்கள்
எந்திரங்கள் கீறி யெழுத்தடைத்துக் கட்டுகின்ற
மந்திர வோலைகட்கு வாய்ப்பாகும்—பைந்தொடியே
சீராங் குருத்தைத் திகழ்வட்ட மாயரிந்து
நாராசங் கோத்திறுக்க நற்பொல்லாஞ்—சேரும்
வியர்வைகளை நீக்கும் விசிறியாம் வெய்யிற்
புயன்மழையும் போக்கும் குடையாம்—வயன்மேவு
மள்ளர் தலைக்கணியும் வள்ளத் தலைப்பாவாம்
பிள்ளைவிளை யாடுபொருட் பேதமாங் — கொள்ளுஞ்
சுரையுண் பிழாவுமாஞ் சோறுண் கலமாம்

நிரைபூணு மாகவே சேர்வ — ருரையோலை
ஈர்க்கினுறி யீர்வாணி யேற்றசட்டி பானைகளைச்
சேர்க்குமனை தட்டுமுறஞ் செய்யலாம் — ஆக்குபெயர்

**பனைப் பெயர்.**

காகக் கருப்பை கருங்குந்தி செங்குந்தி
மாக மளவும் வளர்நெடுமி — ஆகவுங்
கட்டைச்சி பூமணத்தி கங்கிநுங்கி யோர்நாலு
கொட்டைச்சி யென்றனந்தங் கூறுவர் — இட்டமுடன்

**வேறுபயன்**

தாவும் பனங்குருத்தைத் தாரணியோர் நல்லதெண்
ஆவலுட னுண்டிடுவா ராரணங்கே — மேவுமரம்
இல்லங்கள் கோல விசையுமறச் சாலைசெய
நல்லமடம் பூம்பந்தர் நாட்டிவைக்கச் — சொல்லுகின்ற
தூணும் நிலையாம் துலாவாம் வளைமரமாங்
காணுஞ் சலாகை கதவுமாம் — பேணியே
யுப்பிட்டு வைக்க வுகந்த கலமாகும்
பொற்புடைய வேர்க்காலும் பொல்லுமாந் — தப்பாமல்
நட்டா யிரவருட நானிலத்திற் காய்த்துநிற்கும்
பட்டா யிரவருடம் பாழ்போகா — கட்டியுல
காண்டதுரி யோதனரர்ற் காடடைந்து வெம்பசிக்குப்
பாண்டவரு முண்டு பயனடைந்தார் — நீண்டபுகழ்
வீடுமன்பொற் றேரிலணி வெற்றிக் கொடியாகும்
பாடுபுகழ்ச் சேரனுக்கும் பைந்தொடையாம் — நாடுபுகழ்
திங்கட் குடையுடைய சேரனுஞ் செம்பியனுஞ்
சங்கத் தமிழறிந்த பாண்டியனும் — அங்கொருநாட்
பட்டபனந் துண்டமௌவை பாட்டுக் குகந்தளிக்க
இட்டமுட னுண்டதுவு மிப்பழங்காண் — சுட்டாலும்
வித்து முளைக்கும் வியனற் புதப்பனையைப்
புத்தியாய்ப் பேணிப் பொருளடைவர் — தொற்றுபல
நோய்போம் மிடிபோகு நூறுண்டு வாழ்வதற்குக்
காயசித்தி யாகுங் களிப்புண்டா — நேயமுடன்
கற்பகமே யென்றதனைக் கைதொழுது வேண்டினு
லெப்பொழுது மெப்பொருளு மீயுங்காண் — இப்பனையின்

## நூல் வரலாறு.

மெய்ப்புகழை யாதியிலே தால விலாசமெனச்
செப்பினர் நற்றமிழ்ச்செந் நாப்புலவர் — மற்றதனை
ஆங்கிலத்தில் வேக்குசனென் ஸ்ரேரறிஞ னாக்கி வைத்தான்
பாங்கா யதனைப் படியெடுத்து—மீங்கெனது
தந்தையார் கற்று மொழிந்தவற் றின்ஞான்று
சிந்தையி னின்ற சிலகுறிப்பும் — வந்த
உலக வழக்கு முணர்ந்துரைத்தே னேது
கவிவெண்பாட் டாற்கல்வி யில்லேன் — குலவிவரு
குற்றங் களைந்து குணமளைந்து கோதாட்டல்
கற்றறிந்த மாந்தர் கடன்.

## வாழ்த்து

பொன்னின் மழைவாழி பூமி நலம்வாழி
மன்னுயிர்கள் வாழி யறம்வாழி — எந்நாளுங்
கற்பகம்போ லீயுங் கடவுட் பணிவாழி
நற்றமிழும் வாழி நயந்து.

திருச்சிற்றம்பலம்.

தாலவிலாசம் முற்றிற்று.

## அநுபந்தம்.

### காப்பு

தென்னிலங் காபுரிச் சென்னியி லேவளர்
தெய்வப் பனையின் சிறப்புரைக்கத்
தன்னிக ரில்லாத முன்னவன் றுமரைத்
தாளிரண் டுஞ்சரண் ஞானப்பெண்ணே 1

### நூல்.

சீரா யொருபானை சோற்றுக் கொருசோறு
செம்பதம் பார்ப்பது போற்பனையி
லோரா யிரம்பய னுண்டா மவற்றினு
ளொன்றிரண்டு சொல்வேன் ஞானப்பெண்ணே 2

### பனையின் தோற்றம்.

அன்னையு மப்பனு மாகி யுயிர்களை
யன்புடன் காக்குங் கடவுளந்நாள்
மன்னுயிர் வாழ்வுறப் பல்வகை யாகிய
மரங்கள் படைத்தனன் ஞானப்பெண்ணே 3

விண்ணுல கத்தினி லைந்து தருக்களை
வேண்டும் பொருடர வேபடைத்தும்
மண்ணுல கத்தினிற் றெய்வப் பனையொன்றை
வள்ள லருளினன் ஞானப்பெண்ணே 4

கட்டா யிரமாண்டு பூமியி லேநின்று
நல்ல பயன்க ளுதவிடுமாம்.
பட்டா யிரமாண்டு பாழடை யாதென்று
பழமொழி கூறுவர் ஞானப்பெண்ணே 5

## பனையின் பெயர்கள்.

கட்டைக் கறுப்பி கருங்குந்தி செங்குந்தி
காகக் கருப்பைச்சி பூமணத்தி
நெட்டைச் சிவப்பி சடைச்சிநாற் கண்ணிச்சி
நீண்ட குலைச்சியாம் ஞானப்பெண்ணே 6

பிள்ளைக்குத் தாய்கொடாப் பெரியவா ழைக்காய்ச்சி
பெற்றிடு மாயிரங் காய்ச்சியுடன்
கொள்ளு நுரைச்சி நரைச்சிநற் றேரைச்சி
கூறுவ ரின்னமு ஞானப்பெண்ணே 7

## பனையுண்டாக்குதல்.

கொத்திவெட்டி வேலி கட்டிப் பழுதிலாக்
கொட்டைகளை யேழு சாணுக்கொன்றாய்ப்
பத்தி பத்தியாக மண்ணிற் புதைத்திடப்
பரவி முளைவரும் ஞானப்பெண்ணே 8

மூடு படவிரித் தாடுபாம் பைப்போல
முளைத்து வளரும் பருவமதில்
ஆடுமாடு தின்னு தோம்பி வளர்த்திடில்
ஆண்டுபத் திற்பயன் ஞானப்பெண்ணே 9

பெண்பிளை யுப்பனை யுப்பரி பக்குவம்
பேணி வளர்த்திடி லாண்டுபத்திற்
பண்புட னேபய னீந்திடு மென்றுமுற்
பாவலர் கூறினர் ஞானப்பெண்ணே 10

## பயன்கள்.

உருக்குவா ளேந்திப் பகைசெற் றுலகினை
யோம்பு மணிமுடி மன்னவன்போற்
கருக்குவா ளேந்திக் கலியை யழித்திந்தக்
காசினி யைக்காக்கும் ஞானப்பெண்ணே 11

## கங்குமட்டை.

தங்குமட் டாய்வளர்ந் தேசரு காகிப்பின்
றூனே கழன்று சரிந்துவிழுங்
கங்குமட் டைகூட்டத் தும்பரய் விறகாகிக்
கைப்பொருள் ஈந்திடும் ஞானப்பெண்ணே 12

## ஓலை.

வீடுகள் வேய்ந்திட வேலி யடைத்திட
விசிறிகள் செய்யக் குடில்பொதிய
மாடுக ளுக்குண வாகவைக் கான்செய
வள்ளப் பிழாவுமாம் ஞானப்பெண்ணே 13

வார்ந்திட்ட சட்டங்க ளொன்றின்மே லொன்ருக
வைத்தடுக் கிப்பின் வரிந்துசெய்த
தேர்ந்திட்ட மள்ளர் தலைப்பாகை போலெந்தத்
தேசத்தி லேயுண்டு ஞானப்பெண்ணே 14

## ஓலைச் சருகு.

வாரி விளையா வயற்கெரு வாகவே
வற்றற் சருகினைத் தூவிவிட்டால்
வீரிய மாகவே செந்நெல் விளைந்திடும்
வேறும் பயிர்வரும் ஞானப்பெண்ணே 15

## மட்டை.

வலிய கருக்கொடு நாருந் தரும்மட்டை
வரிச்சுக் குதவு நெசவுசெயும்
எலிகளுக் கேற்றி யழக்கிப் பிடித்திடும்
இடார்ப்பொறி செய்யலாம் ஞானப்பெண்ணே 16

## நார்

கட்ட வுதவிடுங் கண்ணி கயிற்றுநாற்
காலிகள் கூடைகள் பின்னிடலாம்
மட்டை யுதவிடு நாரினா லின்னமும்
வாய்க்கும் பொருள்பல ஞானப்பெண்ணே 17

## நர்க்கு.

சட்டிபா னையேறி யாடுமு றிவகை
தக்கவீர் வாணிகள் தட்டுவகை
கொட்டிப் புடைக்குஞ் சுளகிவை யீர்க்கினிற்
குல்லாவுஞ் செய்யலாம் ஞானப்பெண்ணே 18

## ஓலைச்சட்டம்.

ஐந்து வயதினிற் கையி லெடுக்கின்ற
வரிவரி யேடு முதலாக
முந்து பலகலை யாகம மோலையின்
முன்ன மெழுதினர் ஞானப்பெண்ணே 19

## ஓலைச்சார்வு.

பன்னத்தா லுண்டாகு மெல்லாப் பொருளையும்
பன்ன முடியுமோ பல்வகையாம்
வன்னப்பெட் டிகூடை பாய்கடக முமல்
மற்று மனந்தமாம் ஞானப்பெண்ணே 20

## ஓலைப்பொல்லு.

வட்டமாக் வெட்டி நடுவே துளைசெய்து
வளையாத கம்பியிற் கோத்திறுக்கித்
திட்டமா கச்சீவிச் செய்தவோ லைப்பொல்லுத்
தேடக் கிடையாது ஞானப்பெண்ணே 21

## குருத்து.

சாற்றும் பனையின் குருத்தினை முற்றமுன்
தானெடுத்து வெட்டி யுண்பவர்க்குப்
போற்றுங் குடரினிற் குத்துங் கிருமிகள்
போயகலு மென்பர் ஞானப்பெண்ணே 22

ஆக்க மளிக்கப் படைத்திட்ட மங்கல
மான பனைபய னீவதற்குக்
காக்கையின் மூக்குப்போற் கார்த்திகை மாதத்திற்
கருக்கொள்ளு மென்றனர் ஞானப்பெண்ணே 23

பம்பிய பாளை வெளிவந்து பைப்பயப்
பற்றுங் குரும்பைக ளிற்பலவும்
வெம்பி விழுமெடுத் தாவின் பசிகெட
வெட்டிவைத் தால்நன்மை ஞானப்பெண்ணே 24

## நுங்கு

மங்கல மாமணப் பந்தரிற் றோரண
வாயிலி லேமகிழ் வாகவைக்கும்
நுங்கின் சுவையினை யுண்டறிவ தன்றி
நுவல முடியுமோ ஞானப்பெண்ணே 25

கண்ட வுடனேவா யூறி யினித்திடுங்
கற்கண்டோ! தேனோ! நறும்பாகோ!
அண்டர்கள் நுங்கினை யுண்டறிந் தால்முன்னே
யமுதங் கடைந்திடார் ஞானப்பெண்ணே 26

## சார்வாய்

சீராக முற்றாத தாலக் கனியினைச்
சீவிப் பருப்பொடு தேங்காயின்பால்.
நேராக வுப்பிட் டவித்துண மற்றதை
நிகரான தெங்குண்டு ஞானப்பெண்ணே 27

## பனம்பழம்

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும்
தென்னவனு மௌவை சொற்படியே
மங்கல மாயுண்ட தெய்வப் பனம்பழம்
மரியாதை யற்றதோ ஞானப்பெண்ணே 28

கைப்புமுப் பும்போக நாலுமொன் றாகவே
கலந்து சுவைக்கும் பனம்பழத்தின்
துய்க்குஞ் சுவைக்கு நிகராக வேறொன்றைச்
சொல்ல முடியுமோ ஞானப்பெண்ணே 29

அந்தப் பனைதரும் நல்ல பழத்தினை
யாராய்ந் தெடுத்துத் தழலிட்டே
வெந்த பதத்தினில் நீரிற் கழுவியே
மேற்றோலை நீக்குவர் ஞானப்பெண்ணே 30

கையாற் பிசைந்து கறந்து கறந்து
களியினை வாய்வைத் துறிஞ்சியுண்டாற்
செய்தேன் திரட்சிப்பால் சீனி முதலிய
தித்திப்பென் றுண்ணாரே ஞானப்பெண்ணே 31

வாய்ச்சிட்ட கற்பக தாருவெ னும்பனை
மதுரப் பழத்தினை யாமறந்தே
ஈச்சம் பழத்திற்கு வாயூறிக் கைப்பொருள்
இழக்கின்ற வாறென்ன ஞானப்பெண்ணே 32

## பனாட்டு

சுத்தத் தலத்திற் றொடைக்குமே லாகவே
தோன்றிடப் பந்தர் சமைத்துக்கொண்டே
வைத்த பழங்களைப் பட்டடை யிற்றட்டி
வாங்கிப் பிசைகுவர் ஞானப்பெண்ணே 33

கூறுஞ் சிறுதடி கூட்டியொன் ருய்க்கட்டிக்
குந்தைத் துழாவித் துழாவியெடுத்
தூறுங் களியினைச் சல்லாப் புடைவையி
லூற்றி வடிப்பார்கள் ஞானப் பெண்ணே 34

எட்டுநா ளெட்டுக் களியினைப் பூரயில்விட்
டேவெயிற் காயப் பரவியிறை
மட்டோதா கத்தடித் துப்பத மாகவே
வந்தா லெடுப்பார்கள் ஞானப்பெண்ணே 35

உப்பும் பிரண்டையு மொக்கவதிற்றூவி
யொவ்வொரு சாணுக்குச் சாண்கீறித்
தப்பாமற் றட்டை யகப்பையி னல்மெல்லத்
தட்டா யெடுப்பார்கள் ஞானப்பெண்ணே 36

கூடையி லிட்டு மடித்துப் பரணிலே
கொண்டுவைத் துப்பின்ன ருண்டிடுவார்
பீடை கெடும்பசி போம்மலம் போமின்னும்
பெலனுமுண் டாமென்பர் ஞானப்பெண்ணே 37

உப்புப் புளிமிள காயுட னேவெள்ளை
யுள்ளி மிளகு சமன்கூட்டித்
தப்பாம லம்மியி லிட்டரைத் தேதொட்டுத்
தானுண்டல் நல்லது ஞானப்பெண்ணே 38

செங்கதி ரோன்சுடு மிந்தப் பலகாரம்
செய்துவைத் துத்தின்ன மாட்டாம
லங்கே பிறர்சமைத் திங்கே விடுமவைக்
காசைப்பட் டோமடி ஞானப்பெண்ணே 39

## வேறு பயன்

ஒடியல் கிழங்குபூ ரான்முத லாகிய
வோரா யிரம்பய னுண்டிவற்றை
மூடிய வுரைப்பது கூடாகோ ராயிர
முடியுடை யானுக்கும் ஞானப்பெண்ணே 40

### ஊமல்

செல்வர்க்கு மூக்கிடு தூளிடுஞ் செப்பாகும்
சித்த வைத்தியர்க் குக்குடுக்கை
கொல்லர்க்குத் தூராக் குணக்கரி யாமென்று
கூறினா ரூமலே ஞானப்பெண்ணே 41

### கருப்ப நீர்

இளையபாளை தட்டி முட்டிகட்டிச் சுண்ணம்
ஏற்றி யெடுக்கின்ற வின்பநன்னீர்
தழையும் பனங்கட்டி சீனிகற் கண்டுகள்
சமைக்க வுதவுமே ஞானப்பெண்ணே 42

### கள்ளு

அளிக்குஞ் சுரபியின் பாலெனப் பாற்கட
லமுதெனக் குடியர்கள் போற்றுங்கள்ளைப்
புளிக்குமு னுண்டிடிற் பொல்லாப் பிணிபல
போய்விடு மென்றனர் ஞானப்பெண்ணே 43

### பனையைப் பேணல்

எட்டுநா றுவகை நற்பய னீகின்ற
இன்பப் பனையை மறந்ததனாற்
பட்டுக்கெட் டோமினிப் பாவித்துப் பேணியே
பணமுட்டைத் தீர்க்குவம் ஞானப்பெண்ணே. 44
விண்கண்ட தேவரு மாசைப்பட் டேவந்து
வேண்டிநிற் கும்வியன் கற்பகத்தைக்
கண்கண்ட செல்வக் களஞ்சிய நீயென்று
கைதொழ வேண்டுமே ஞானப்பெண்ணே. 45

### வாழ்த்து

இல்வாழ்வுக் காகிய எல்லாப் பொருளையு
மெங்களுக் கெப்பொழு துங்கொடுக்க
வல்ல பனையெங்கள் செந்தமிழ் நாட்டிலே
வாழிய வாழிய ஞானப்பெண்ணே. 46
கற்பக மேகாம தேனுவே யெங்களைக்
காத்திடுஞ் செல்வக் களஞ்சியமே
அற்புத மேயென்று போற்றுந் திருப்பனை
யனவர தம்வாழி வாழியவே. 47

முற்றிற்று.

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90

## இதுகாறும் வெளிவந்த புலவர் நூல்கள்:

1. உயிரிளங் குமரன் நாடகம்
2. கந்தவனக் கடவை நான்மணிமாலை
3. சாவித்திரி கதை (உரைநடை நூல்)
4. கந்தபுராண நுண்பொருள் விளக்கம்

(சைவாங்கில வித்தியாசாலை வெளியீடு)

5. தந்தையார் பதிற்றுப்பத்து
6. நல்லை முருகன் திருப்புகழ்
7. நல்லையந்தாதி
8. அருணாசலந்துரை சரித்திரச் சுருக்கம்
9. சுகாதாரக் கும்மி

(சைவபரிபாலன சபையார் பதிப்பு)

10. சூரியவழிபாடு
11. மருதடி விநாயகர் பாமாலை
12. கந்தவனநாதர் திருப்பள்ளியெழுச்சி
13. அட்டகிரிப் பதிகம்
14. கல்லுண்டாய் வைரவர் பதிகம்
15. கதிரைமலை வேலவர் பதிகம்
16. செந்தமிழ்ச் செல்வியாற்றுப்படை
17. சிறுவர் பாடல்கள்.

Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★

குறிப்பு: புலவர்தம் அருமைத் துணைவரும் மாணாக்கரும், இலங்கைத் தேயிலைத் தோட்ட அலுவலாளர் சங்கத்து அமைச்சரும் ஆகிய சைவத்திருவாளர், க. வேலுப்பிள்ளையவர்கள், மேற்போந்த நூல்களைக் கலைத்தொண்டெனக் கருதிக் காலந்தோறும் வெளியிட்டு வந்தார்கள். அந்நூல்களிற் பல வெழுதற்குக் காரணம் பிள்ளையவர்களின் இடையறவூக்கப்பாடேயாம்.

301